
# அஷ்டாவக்ர கீதை



ப்ரக்ருன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அஷ்டாவக்ர கீதை |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞன் |
| வெளியீடு | : | பராபரம் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2018 |
| பக்கங்கள் | : | 86 |
| விலை | : | அக விழிப்பு |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |

# அஷ்டாவக்ர
# கீதை

தெளிவுரை

**ப்ரக்ஞன்**

# முன்னுரை

அத்வைத ஞானத்தை உலகத்தாருக்கு கொண்டு வந்து சேர்க்க முயன்ற முக்கிய நூல்களில் இந்த "**அஷ்டாவக்ர கீதை**" மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. இந்த நூலில், இரண்டு ஞானிகளான ஜனகருக்கும், அஷ்டாவக்ரருக்கும் நிகழ்ந்த உரையாடல் பகுதிகள்தான் இந்த கீதை.

இந்த அஷ்டவக்ர கீதையில் ஜனகர் கூறுகிறார்:-

"**மே நாஸ்தி கிஞ்சன அதவா மே சர்வம்**" அதாவது, "**ஒருவிதத்தில் எதுவுமே எனக்குச் சொந்தமில்லை. மற்றொரு முறையில் ஒவ்வொன்றும் என்னுடையதே ஆகும்.**"

கிட்டத்தட்ட 300 ஸ்லோகங்களைக் கொண்ட அஷ்டவக்ர கீதையிலுள்ள பொருள் பொதிந்த வாக்கியம் இது.

அஷ்டவக்ர கீதையின் மற்ற ஞானக்கருத்துக்கள் சிலவற்றைப் பார்க்கலாம். உனது உடலில் இருந்து நீ வேறுபட்டவன். உணர்வுதான் நீ. இந்த அறிவில் நீ நிலைப் பெற்று இருந்தால், எப்போதும் அமைதியாகவும், இன்பமாகவும், பந்தங்களில் இருந்து விடுபட்டவனாகவும் உன்னால் இருக்க முடியும்.

சரி - தவறு, இன்பம் - துன்பம் போன்ற இருமைகள் உனது மனதை மட்டுமே சேர்ந்தவைகள்.

உனக்கும் அவற்றுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. நீ! எதையும் செய்பவனும் இல்லை. அதன் பலன்களை அனுபவிப்பவனும் இல்லை.

நீ எப்போதும் விடுதலைப் பெற்றவன். அனைத்து நிகழ்வுகளுக்கும், நீ வெறும் சாட்சி மட்டுமே என்ற உண்மையை மறப்பதுதான் உன் அனைத்து துன்பங்களுக்கும் காரணம்.

மனதின் துன்பங்களில் இருந்து விடுதலை அடைவது **மோக்ஷம்** என்றும், அதைவிடுத்து மனம் போன போக்கிலேயே போகின்றவன் அடைவதுதான் **பந்தம்** என்றும் அறிவாயாக.

‘**நீ எதுவாக நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிவிடுவாய்**’ என்ற வாசகம் உண்மையானது. தன்னை இந்த உடலாகவும், இந்த உலகத்தை உண்மையாகவும் அறிந்தவர்கள் எல்லோரும், அவர்கள் மனம் போல வாழ்வதை யாரால் கட்டுப்படுத்த முடியும்? அதனால், அந்த மனதைக் கட்டுப்படுத்த வேண்டுமானால், அதற்கு, “**ஆத்ம ஞானம்**” ஒன்று மட்டுமே துணைப் புரியும் என்ற நிலையில், இந்த அஷ்டவக்ர கீதையை என்னற்ற மகான்கள் ஞானப் பொக்கிஷமாகக் கருதுகின்றனர்.

நன்றி!

என்றும் அன்புடன்.

**ப்ரக்ஞன்.**

# அஷ்டாவக்ர கீதை – கதை

மிதிலை நகரின் அரசன் ஜனகன் தனது அரசவையின் தலைமை வித்வானுடன் வேதாந்த நூல் ஒன்றில் சொல்லப்பட்ட தகவல் குறித்து உரையாடிக் கொண்டிருந்த போது, அந்த நூலில் பிரம ஞானம் பெறுவது குதிரை ஏறும் ஒரு மனிதன் குதிரையின் சேணத்தில், ஒரு காலை வைத்து மற்றொரு காலை எடுத்து வைக்கும் நேரத்திற்குள் பிரம்ம ஞானம் பெறலாம் என்றிருந்தது.

ஜனகன் உரையாடலை நிறுத்தி, "**இந்த வாக்கியத்தின் உண்மையை உறுதி செய்யும் பொருட்டு ஒரு குதிரையைக் கொண்டுவரச் சொல்லவா?**" எனக் கேட்டான்.

“**உண்மைதான், அதில் அணுவளவும் சந்தேகம் இல்லை!**” என்றார் வித்வான்.

“**அது நடக்க முடியாதது என்று தோன்றுகிறது. அது உண்மையானால் என் குதிரையை இப்போதே வரவைக்கிறேன். அதன் முதல் அங்கவடியில் கால் வைத்து ஏறி இரண்டாம் அங்கவடியில் காலை வைக்கு முன் பிரம்ஹஞானம் எனக்கு சித்திக்கும் படி செய்து நிரூபிக்க வேண்டும்!**” என்றார் ஜனகர்.

வித்வான் "**எனக்கு அந்த திறமையில்லை; அது என்னால் முடியாது. ஆனாலும் இந்த வாக்கியம் பொய்யில்லை**" என்றார்.

கோபம் கொண்ட ஜனகர் "**அப்படியானால் அந்த வாக்கியத்தை சாத்திரத்தில் இருந்து எடுத்துவிடுங்கள்**" என்றார்.

அதற்கு, அந்த "**ஞான அனுபவத்தை நிரூபிப்பது என்னால் இயலாது**" என்று அந்த வித்வான் பின்வாங்கினார்.

இந்த வாக்கியத்தில் உள்ளதை நிரூபிப்பது என்னால் இயலவில்லை என்பதால், பொய்யென்று சொல்ல முடியாது என்று கூறிய வித்வானை சிறையில் அடைத்தார் அரசன்.

அதன்பிறகு, அந்த நகரத்தில் இருக்கிற பண்டிதர்கள் அனைவரையும் அழைத்து, அந்த சாத்திரத்த்ல் கூறப்பட்ட வாக்கியத்தை நிரூபிக்கும்படி கேட்டார். அதற்கு அவர்களும் வித்வான் சொன்னது போலவே, அந்த சாஸ்திரம் கூறுவது முற்றிலும் உண்மை என்று சொன்னார்கள்.

"**அப்படியானால் உடனே குதிரையை வரவழைக்கிறேன், நிரூபியுங்கள்**" என்றார் ராஜா.

'**அதற்கு, அவர்களும் எங்களுக்கு அதை நிருபிக்கும் திறமையில்லை**' என்றார்கள். உடனே, அரசர் ஜனகர் அவர்கள் அனைவரையும் சிறையில் அடைத்து, தன்னுடைய காவலர்களிடம் இந்த நகரத்திற்கு வெளியில் இருந்து, புதியதாக யாராவது வித்வான்கள் வந்தால், அவர்களை தன்னிடத்தில் அழைத்து வரும்படி கட்டளை இட்டார்.

அது முதல் வித்வான்கள் யார் வந்தாலும், அவர்களை ராஜாவிடம் அழைத்துப் போவதும், அவர் அதே கேள்வியை கேட்பதும், வித்வான்களும் அதே பதிலை சொல்வதும், அவர்களை ராஜா சிறையிடுவதுமாக தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

இந்த நாளடைவில் அந்த ஊரிலிருந்து மற்ற ஊர்களுக்கும் என திக்கெட்டும் பரவி, சிறைக்கு பயந்து, பெரும்பாலான பண்டிதர்கள் மிதிலை நகருக்குச் செல்வதை நிறுத்தி விட்டார்கள்.

ஒரு நாள் அரசனின் சந்தேகத்தை நீக்கும் பொருட்டு, உடல் அங்கங்கள் எல்லாம் வலைந்து, நெளிந்து அஷ்ட கோணலாக இருந்த அஷ்டவக்கிரன் எனும் இளைய முனிவரை, அந்த ஊர் மக்கள் ஜனகனின் அரச சபைக்கு அழைத்துச் சென்றனர்.

அரசரும் அவரை வரவேற்று, அமரவைத்து, அந்த அஷ்டாவக்ரரை நோக்கி, "**முனிவரே குதிரை கொண்டு வரச் சொல்லவா?**" எனக் கேட்டார்.

அதற்கு அந்த அஷ்டாவக்ர முனிவர் அரசனிடம் "**அரசே அவசரப்பட வேண்டாம் தாங்கள் கேட்ட சந்தேகத்தை போக்க ஒரு தனி இடத்திற்கு செல்ல வேண்டும்**" அதற்கு ஏற்பாடு செய்க என்றார்.

உடனே, அரசன் கட்டளைப்படி அந்த அஷ்டாவக்ர முனிவர் பல்லக்கிலும், அரசன் அவனது படைகள் மற்றும் பரிவாரங்களுடனும் அஷ்டாவக்ரரை தொடர்ந்து, அந்த முனிவர் அழைத்துச் சென்ற காட்டிற்கு சென்றனர்.

அவர்கள் அனைவரும் அந்த காட்டிற்கு சென்று அடைந்ததும், முனிவர் அஷ்டாவக்ரர் அரசனைப் பார்த்து, "**அரசே உங்கள் படை பரிவாரங்கள் திரும்பிப் போகட்டும் நாம் இருவர் மட்டும் தனித்து இருப்பது**" நல்லது என்று கூறினார்.

உடனே, ஜனகராஜனும் தனது படை பரிவாரங்களை திருப்பி தனது அரண்மனைக்கு அனுப்பி வைத்தவுடன், குதிரை மீது அமர்ந்து இருந்த அரசன் முனிவரைப் பார்த்து, "**ஐயனே! தாங்கள் கூறியபடி, இந்த குதிரையில் இருந்து நான் இறங்க, அதன் சேணையில் ஒரு காலை வைத்து, மறு காலை எடுக்கும் முன்னர் எனக்கு ஞானத்தை அருளுங்கள்!**" என்று வேண்டினான்.

அதற்கு, அஷ்டாவக்ரர் அரசனிடம் "**அரசே தாங்கள் கூறும் அதே நூலில் ஞானம் குருவினால் சீடனுக்கு அருளப்படுவது என உள்ளதே, அந்த நிலையில் தாங்கள் தற்போது எனக்கு சிஷ்யனாக இருப்பது உண்மைதானா?**" எனக் கேட்டார்.

உடனே, அரசனும் அஷ்டாவக்ரரை வணங்கி, **ஐயனே!** "**நான் தங்களுக்கு சீடனானேன் அருள் புரிக!**" என்றான்.

அதற்கு, முனிவர் அஷ்டாவக்ரர் அரசனிடம், "**ஜனகா உண்மையான சீடன் தன்னையும், தன்னுடையதையும் குருவுக்கு முழுவதுமாக அர்ப்பணிக்க வேண்டும்**" எனறார்.

அதற்கு, அந்த ஜனகராஜனும் ஐயனே! "**அவ்வாறே அனைத்தையும் தங்களுக்கு அர்பணம் செய்கிறேன்**" என்றான். உடனே, அஷ்டாவக்ரர் அரசனிடம் "**அவ்வாறே ஆகட்டும்**" எனக்கூறி, அங்கிருந்து மறைந்து போனார்.

அரசனும் அந்த இடத்திலேயே சிலையைப்போல ஆடாமல் அசையாமல் அப்படியே நின்றுவிட்டான். பொழுது சாய்ந்து, நீண்ட நேரமாகியும் மன்னன் நாடு திரும்பாததால், அமைச்சர் மற்றும் ஏனையோரும் மன்னனைத் தேடி அந்த காட்டிற்கு வந்தனர்.

அங்கு மன்னன் சிலையென நிற்பதையும், முனிவர் அஷ்டாவக்ரர் அங்கு இல்லாததையும் கண்டு அதிர்சியுற்றனர். அந்த நிலையென நின்ற மன்னனும் அரண்மனையிலிருந்து அமைச்சர் முதலானோர் அங்கு வந்திருப்பதைக்கூட உணராமல் அப்படியே மயக்க நிலையிலேயே இருந்தான்.

அரசனது நிலையைக் கண்ட அமைச்சரும், மற்றவர்களும் உடனடையாக அரசனை ஒரு பல்லக்கில் படுக்க வைத்து அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு சென்றனர்.

மறுநாள் காலை வரை, அந்த அரசனிடம் எந்த மாற்றமும் இல்லாதது கண்டு, உடனடியாக அஷ்டாவக்ரரை கண்டுபிடித்து அரண்மனைக்கு அழைத்து வர அமைச்சர் படைகளை அனுப்பி வைத்தார்.

அன்று, மாலை நேரத்தில் சில படைவீரர்கள் முனிவர் அஷ்டாவக்ரரை அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு வந்தனர். அரண்மனையில் அமைச்சர் அரசனின் நிலைக் கண்டு, மிகுந்த கோபம் கொண்டு இருந்தாலும், அரசனின் நலனைக்கருதி, அந்த முனிவர் அஷ்டாவக்ரரிடம், ஐயனே! அரசனை பழைய நிலைக்கு கொண்டுவர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அதுமட்டுமின்றி, அரசனின் இந்த மயக்க நிலைக்கு அஷ்டாக்ர முனிவரே காரணமென அமைச்சர் அவர்மீது குற்றம் சுமத்தினார். அதற்கு அஷ்டாக்ரர், அமைச்சரே! தாங்கள் என்மீது குற்றம் சுமத்துவது உண்மையானால், அதை அரசனிடமே கேட்டு அறிந்துக் கொள்ளலம் எனக்கூறி, "**ஜனகா**" என அழைத்தார். உடனே அரசனும், "**சுவாமி**" என வணங்கினான்.

அதற்கு, அஷ்டாவக்ரர் அரசனிடம் "**ஜனகா நான் உன்னை மிகவும் பரிதாபகரமான மயக்க நிலைக்கு கொண்டு வந்து விட்டதாக குற்றம் சாட்டுகிறார்கள்**" என்றார். அதைகேட்ட அரசன் கோபமுற்று "**யார் அப்படிச் சொன்னது?**" எனக் கேட்டான்.

அதைக்கண்ட அமைச்சரும் மற்றவர்களும் பயந்துக் கொண்டு, அரசரை உடனடியாக இயல்பு நிலைக்கு கொண்டுவர வேண்டும் என அந்த அஷ்டாவக்ர முனிவரை வேண்டினர்.

அஷ்டாவக்ரர் அரசனிடம், "**ஜனகா நீ ஏன் இவ்வாறு இருக்கிறாய்?, உலக நடைமுறைக்கு மாறாக இருப்பதேன்?, எல்லோரையும் போல இருப்பது தானே?**" என்றார்.

அதைக்கேட்ட மன்னன் "**முனிவரே நான் உமது சீடன் உமது ஆணைப்படியே நடப்பேன்**" என்றான்.

“**அரசனே, ஆத்ம ஞானம் என்பது, தன்னை மறந்து, தன் சொரூப நிஷ்டை நிலையில் நாம் நிலைத்து நின்றாலும், அது, பேருணர்வுடன் இணைந்த பேரானந்த நிலையாக இருப்பினும், நமது மனம் மற்றும் உடலுக்குண்டான நியதிகளை நாம் மறக்கலாகுமா? ஆகவே, உடனடியாக, உன்னுடைய அழுக்கான உடைகளைக் கலைந்து, உணவு உட்கொண்டுவா! அதன் பின்னர் நாம் இருவரும் பேசலாம்.**” என்று அஷ்டாவக்ரர் அரசனிடம் கூறினார்.

அதன்பிறகு, அவர்கள் இருவரின் உரையாடல் பகுதிகளாக, முனிவர் அஷ்டாவக்ரர் அரசனிடம் உபதேசித்த பிரம்ம ஞானமும், அதற்கான சந்தேகங்களை மன்னர் ஜனகர், அஷ்டாவக்ரரிடம் கேட்ட கேள்விகளுமே, “**அஷ்டாவக்ர கீதை**” என்ற மிக உயரிய **ஞான நூல்** ஆகும்.

அதாவது, அஷ்டவக்ரன் (சமக்கிருதம்: अष्टावक्रः) என்பவர், நம்முடைய சனாதன தர்மத்தின் வழியில் வந்த இந்து சமயப் புராணங்களில் குறிப்பிடப்படும் துறவியாவார். இவரை அஷ்டாவக்கிரர் என்றும் அழைக்கின்றனர்.

**அஷ்ட** + **வக்கிரன் -** அஷ்டம் என்றால் எட்டு என்றும் வக்கிரன் என்றால் கோணல் என்றும் பொருளாகும். இவர் பிறக்கும் போதே, இவரது உடல் அங்கங்களாகிய கை, கால்கள் எல்லாம் கோணல், மாணலாக இருந்தது. அதாவது, இவருடைய உடலில் இரு பாதங்கள், இரு கால் மூட்டுகள், இரு கை மூட்டுகள், மார்பு மற்றும் தலை ஆகியவற்றில் கோணல்கள் காணப்பட்டன.

ஆழமான சாஸ்திர ஞானத்தினால், அவர் அடைந்த ஆத்ம ஞான அனுபூதியின் வாயிலாக, அவரை அனைவரும் அஷ்டாவக்கிர ரிஷி அல்லது அஷ்டாவக்கிர முனி என்று அழைக்கின்றனர்.

பார்வைக்கு உடலளவில் அவர் கோரமாக இருந்தாலும், உள்ளத்தால் உயர்ந்தவர், உயர் அறிவு அடைந்தவர் என்பதினால், அவரது உடல்தோற்றத்தினை வைத்து, அவரது அறிவினை அளவிடுதல் கூடாது என்பதாக இவருடைய வாழ்க்கையை வைத்து, இவரது ஆத்ம ஞான உபதேசங்கள் இன்றும் நம் இந்து தர்மத்தில் போதிக்கப்படுகிறது.

அத்தகைய உயரிய ஞானியான அஷ்டவக்கிரர் ஜனக மகாராஜருக்கும், யாக்ஞவல்க்கியருக்கும் குருவாக இருந்து, உயரிய ஆத்மஞான விஷயங்களை உபதேசித்துள்ளார்.

அவ்வாறு, அவர் உபதேசித்து அருளிய, உயரிய “**அஷ்டவக்ர கீதை**” என்ற நூலை இனி நாம் காணலாம்.

# அத்தியாயம் - 1

**அரசன் ஜனகரும், முனிவர் அஷ்டாவக்ரரும் ஒருவருக்கு, ஒருவர் ஆத்ம ஞானத்தைப் பற்றி கலந்துரையாடும் பகுதிகள் வருகின்றன.**

## ஜனகர்:

ஸ்வாமி! ஞானத்தையும், முக்தியையும், ஆசையற்ற தன்மையையும் எவ்வாறு பெறுவது? இதைத் தங்களது கிருபையினால் எனக்கு அருளல் வேண்டும்.

## அஷ்டாவக்ரர்:

1. அன்பா! முக்தி என்ற விடுதலையை நீ விரும்புவாயானால், உலக விஷயங்களை நஞ்சு போன்று ஒதுக்கித் தள்ளிவிடு. இத்துடன் பொறுமை, நேர்மை, வாய்மை, கருணை, மற்றும் திருப்தி போன்றவைகளை அமுதம் போன்று ஏற்றுக்கொண்டு நடைமுறையில் கடைப்பிடிப்பாயாக.

2. மண், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் போன்ற ஐந்து பூதங்களும் நீ அல்ல. முக்தி உனக்கு வேண்டுமானால், இவற்றின் சாட்சியான ஆன்மாவே நீ என்பதை நன்கு புரிந்துக் கொள்.

3. அழிகின்ற உடலை உண்மையென்று கருதாமல் ஒதுக்கி, என்றும் அழியாத, நித்யமான ஆன்மாவே நீ என்ற அறிவினிலே அறிந்து, அமைதியாக உன் சொரூபத்தில் நிலைப் பெற்று நின்றாயானால், அந்த வினாடியிலேயே நீ சுகமும், சாந்தியும், சந்தோஷமும் கூடிய ஜீவன் முக்தியையும் பெற்றவனாவாய்.

4. அந்தணர், புலையன் போன்ற ஜாதி பேதங்கள் எல்லாம் உனக்கு கிடையாது!, பிரம்மச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்ற ஆசிரமங்களும் உனக்கு கிடையவே கிடையாது. இந்த பேதங்கள் எல்லாம் உடலுக்கே அன்றி ஆன்மாவாகிய உனக்கு கிடையாது.

5. உடலில் உள்ள ஐந்து புலன்களைக் கொண்டு, உடலோடு உன்னை அடையாளப்படுத்திக் கொண்டு, அதுப் போன்றே மற்ற பரு உடல்கள் போன்று காணப்படக் கூடியவன் நீ அல்ல. நீ எதையும் பற்றாத, உருவம் இல்லாத எங்கும், எப்பொழுதும், எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருக்கின்ற அந்த ஆன்மாவே நீ என்பதை உணர்ந்து கொண்டு சுகமாயிரு!

6. மனதினால் உண்டாகின்ற சுக, துக்கங்களும், தர்ம, அதர்மங்களும் உனக்கில்லை. அவைகள் எல்லாமே மனதின் கற்பிதமே! மேலும், செயல் செய்பவனும், அதை அனுபவிப்பவனும் நீ இல்லை. உத்தமனே! நீ என்றும் இருக்கின்ற, இவைகளுக்கு அப்பாற்பட்ட விடுதலையுற்றவன்.

7. அனைத்திற்கும் ஒரே சாட்சியாக இருப்பவன் நீ!. நித்திய விடுதலை பெற்ற நிறைவானவன் நீ!. மனதின் கற்பிதத்தினால், இருமைகள் உண்டாகி, காண்பவனை உனக்கு அன்னியமாகக் காண்பதே உனது பந்தம்.

8. அனைத்தையும் செய்பவன் “நான்” என்ற அஹங்காரத்தினால் ஆட்பட்டு, மனதின் கலவரத்தினால், பலவற்றையும் கற்பிதம் செய்துக் கொண்டு, துயரப்பட்டுக் கொண்டு இருக்கின்றாய். உண்மையில் செயல்கள் எதுவும் செய்பவன் நானல்ல என்ற நம்பிக்கை அமுதினை அருந்தி இன்பமுடன் இருப்பாயாக!.

9. எண்ணங்கள் ஏதுமற்ற, சுத்த அறிவாகிய தூய ஞானம் ஒன்றே “**நான்**” என்ற, நிச்சய நெருப்பினால், ‘**அறியாமை**’ என்றப் பெருவனத்தை எரித்து துயரமற்று இரு!.

10. காரிருளில் கயிறு பாம்பு போன்று காணப்படுவதால், அச்சம் உண்டாகின்றது, அதுவே, வந்த வெளிச்சத்தினால் கயிற்றை பாம்பல்ல என்று எப்படி அறிந்து அச்சம் நீங்கினாயோ, அவ்வாறே, பிரகாஷம் பொருந்திய ஞான ஒளியாகிய தூய அறிவே நீ! என்பதை அறிந்து, ஆனந்தமாய் இருப்பாயாக!.

11. தன்னை முக்தன் என கருதுபவன் முக்தன். பக்தன் என கருதுபவன் பக்தன். அதுப்போன்று, உன்னுடைய மதி எதுவோ, கதி அதுவே! என்ற பழமொழி உண்மையாம்.

12. ஆன்மா ஒன்றே, அது சாஷியாகவே இருக்கும், பூரணமானது, எதிலும் பந்தப்படாதது, உருவமற்றது, செயலற்றது, பற்றற்றது, ஆசைகளற்றது, மற்றும் அமைதி மயமானது.

13. அறிவு வெளி நானென்றும், ஆசைகள் ஏதுமற்ற, உள்ளே, வெளியே என்ற இருமைகள் ஏதுமற்ற, பாவனைகளற்ற, சஞ்சலமற்றவனாகத் தன்னையே கருதுவாயாக.

14. இந்த உடல் உண்மை என்ற நம்பிக்கை கயிற்றினால் வெகுகாலம் கட்டப்பட்டுள்ளாய், ஆன்ம அறிவே நானென்ற வாளினால், அந்த கயிற்றை துணிந்து வெட்டி விடுதலை அடைந்து, சுகமாக வாழ்வாயாக!.

15. பற்றற்ற, பணியற்ற, மாசற்ற சுயம்பிரகாசனே நீ!, அதை அறியாமல், உடலை உண்மை என்று கருதி சமாதி பழகுகின்றாயே அதுவே நின் பந்தம்!.

16. இந்தப் படைப்பனைத்தும் உன்னால் மட்டுமே வியாபிக்கப்பட்டுள்ளது, உன்னுள்ளேயே திகழ்வது!. உனக்கு வேறாக ஒன்றுமே இல்லாத தூய ஞான வடிவே நீ! எனவே, உன்னை நீ அற்பமாக எண்ணாதே!.

17. எதனையும் எதிர்பாராமல், ஏற்றி வைத்துக் கொண்டுள்ள, தேவையற்ற பதிவுகளை ஆழ் மனதிலிருந்து நீக்கி, பற்றற்று, அஹம் குளிர்ந்து, ஆழ்ந்த புத்தியுடன் குழப்பமடையாமல், உன் சொரூபமாகிய ஆன்ம ஞானத்திலேயே எப்பொழுதும் நிலைப்பெற்றிருப்பாயாக.

18. காண்கின்ற உருவக்காட்சிகளெல்லாம் உண்மையில்லை, இவைகள் அனைத்தும் மாறிக் கொண்டே இருக்கின்ற மனதின் கற்பிதமே!, உருவமற்றவை மட்டுமே மாறாதது என்ற உண்மையை உணர்ந்தாயானால் இனி உனக்குப் பிறப்பில்லை.

19. கண்ணாடிப் பெட்டிக்குள் இருக்கின்ற பொருளை. அந்த பெட்டிக்கு உள்ளே பார்த்தாலும், வெளியே பார்த்தாலும் ஒன்றே, அதுப்போல இந்த உடலின் உள்ளே பார்த்தாலும், வெளியே பார்த்தாலும் எல்லாம் ஒன்றேயான அந்த பரமான்மனே!.

20. மண்பானைக்குள்ளே இருக்கின்ற ஆகாசமும், வெளியே எங்கும் பரந்து இருக்கின்ற ஆகாசமும் ஒன்றுதானே! அதுபோல, இந்த சிருஷ்டி எங்கும் அணுத்துகள்களாய் நம்முள்ளேயும், வெளியேயும் நிறைந்து இருப்பது அந்த சாசுவதப் பரப்பிரஹ்மமே!.

## முதலாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 2

**குரு உபதேசத்தினால், தெளிவை அடைந்த ஜனகர் தமது நிலையையும், மகிழ்ச்சியையும் இந்த அத்தியாயத்தின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார்.**

## ஜனகர்:

1. நான் இப்பொழுது மாசற்ற அமைதி மயமான, உணர்வு நிலைக்கு அப்பால் விழிப்புற்று இருக்கின்றேன்! இத்தனை காலமும் அறியாமையாகிய மாயையின் மயக்கத்தால் நான் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருந்தேன்!

2. ஆன்ம ஒளி ஒன்றினால் மட்டுமே இந்த உடலும், உலகமும் ஒளிர்விப்பது போல, நானே எல்லாமுமாகவும், இல்லாமையாகவும் இருக்கின்றேன். இல்லாத இந்த உடலையும், உலகையும் மாயை என்று நீக்கினாலேயே, பரம்பொருள் எனக்கு அறியப்படுகின்றது.

3. கடல் அலைகளும், நுரை குமிழிகளும் கடல் நீரிலிருந்து வேறல்ல! என்பதைப் போல, ஆன்ம வெளிப்பாடாகிய இந்த உலகம் ஆன்மாவிலிருந்து வேறல்ல!

4. நெய்யப்பட்ட ஆடையை நன்கு கவனித்து நோக்கினால், அவைகள் வெறும் இழைகள் (நூல்கள்) மாத்திரமே! அதுப்போல, இந்த படைப்பையும் நன்கு கவனித்து விசாரித்து நோக்கினால் அவைகள் ஆன்மாவிலிருந்து வேறல்ல!.

5. கரும்புச்சாற்றிலே உண்டான சர்க்கரை எவ்வாறு இனிப்பிலிருந்து வேறல்லவோ, அவ்வாறே, என்னிடம் உண்டான இந்த உலகம் என்னிலிருந்து வேறல்லவே.

6. கயிற்றை கண்டால் பாம்பு அங்கு இல்லை!, பாம்பை கண்டால், கயிறு அங்கு இல்லை! அதுபோல, தன்னை (ஆன்மாவாகிய தன் சொரூபத்தை) கண்டால், உலகம் அங்கில்லை! அறியாமையினால் இந்த உலகத்தை உண்மை என்று கண்டால், ஆன்மாவாகிய தன் சொரூபம் அங்கே இல்லாமல் மறைக்கப்படுகின்றது.

7. என்னுடைய சுயவடிவம் ஒளியேயன்றி வேறன்று, உலகம் ஒளிர்வது உண்மையில் ஆன்மனாகிய என் இருப்பினாலேதான் என்பது நன்கு தெரிகின்றது!

8. கிளிஞ்சலை வெள்ளியென்றும், கயிற்றை பாம்பென்றும், வெயிலில் கானல் நீரென்றும் அறியாமையால் நினைத்தது போன்று, இந்த உலகம் இருப்பது போன்று, அறியாமையினால் நினைப்பது ஆன்மாவை அறிய முடியாமல் மறைக்கின்றது.

9. மண்ணினால் செய்யப்பட்ட மண்குடம், பொன்னினால் செய்யப்பட்ட நகைகள் மற்றும் கடல் நீரினால் உண்டான அலைகளும் என அவையவைகள் அவை அவைகளிலேயே ஒடுங்குவதுபோன்று, என்னிடமிருந்து வெளிப்பட்ட இந்த உலகு, என்னிடமே ஒடுங்குகின்றது.

10. சாதாரண புழு முதல் நான்முக பிரம்மா வரை கடைசி இதழாக அழிந்தாலும், போற்றுதலுக்கும் அப்பால், அழிவற்ற நானே வியப்புக்குறிய ஒன்றாய் என்றும் இருக்கின்றேன்.

11. உண்மையில் நான் வியப்புக்குரியவனாக, எனக்கு நானே நமஸ்கரிப்பவனாக, ஒன்றாக ஓர் உருவத்தோடு இருந்த போதிலும், நான் வருவதுமில்லை, போவதுமில்லை, ஒரே நேரத்தில் எங்கும் நிறைந்திருக்கின்றேன்.

12. எந்த வடிவத்திற்கும் உட்படாமல், எதையும் தொடாமலேயே தொன்றுதொட்டு இந்த பிரபஞ்சத்தில் பரவி இருக்கும் எனக்கு நிகர் நானே! என்னையே நான் வணங்குகின்றேனே!

13. என்னையே நான் வணங்குகின்றேன்! ஒன்றும் எனக்கு இல்லை, அதேசமயம் வியப்புக்குறிய எண்ணம் அல்லது பேச்சு என எல்லாமாகவும் நானே இருக்கின்றேன். வணங்குவதற்கு எனக்கு வேறாக எந்தப் பொருளும் இல்லாததினாலே என்னையே நான் வணங்குகின்றேன்!.

14. அறிவு, அறியப்படும் பொருள், அறிபவன் என்ற இம் மூன்றும் உண்மையில்லை, அறியாமையால் உள்ள இம் மூன்றும், ஒன்றாய் என்னிடத்தில் விளங்குமோ அவனே நானாகிய ஆன்மன்.

15. ஒன்றைக் காண்பதும், பலவற்றை நினைப்பதும், மனதின் கற்பிதத்திற்குரிய துன்பத்திற்கு காரணம், காண்பதொன்றும் உண்மையில் அங்கில்லை என்பதை உணர்ந்தால் துயரில்லை. ஒன்றேயான தூய ஞான ரஸமே ‘நான்’ என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

16. ஞானம் மாத்திரமே நான்! அறியாமையினால் இந்த உடலென்ற உபாதிக்குள் சிக்கிக்கொண்டு, கற்பனையில் வாழுகின்ற, மனதிற்கு அப்பாற்பட்ட எல்லையற்ற பேரறிவு நான்!

17. பந்தமும் எனக்கில்லை, மோக்ஷமும் எனக்கில்லை, உண்மையில் நான் படைப்பை உட்கொண்டிருந்த போதிலும், உண்மையில் நானே ஏகமாய் இருப்பதால், குழப்பத்திற்கும் இடமில்லை.

18. வடிவமும், சாரமும் அற்ற இந்தப் பிரபஞ்சமும், என்னுடைய இந்த உடலும் உண்மையென்று உறுதியாய் நம்பிக்கொண்டிருந்தேன், தூய ஆன்மனே அறிவுமயமென்று விழிப்புற்று என்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றேன். இனி கற்பனைக்கு இடமே இல்லை!.

19. சொர்கம், நரகம், பந்தம், விடுதலை, பயம் என்ற கற்பனைகளினால் உண்டானதே இந்த உடலும், உலகமும் என கற்பனைகளினால் மனம் மயங்குகின்றது, உண்மையில் அறிவு மயமான ஞானான்மாவான எனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமுமில்லை!.

20. பல்லுயிறும் வாழும் சோலையானாலும், யாருமற்ற பாலைவனமானாலும் நான் வேறுபடுத்தி அல்லது தனிமைப்படுத்தி பார்க்காத பரமான்மனே யான்!

21. நான் உடலல்ல, உண்மையில் நான் உடலைப் பெற்றிருக்கவில்லை, நான் பேரறிவு! என்னுடைய வாழ்க்கைத் தாகம் வெளித் தோற்றத்தோடு என்னைக் கட்டுப்படுத்துகின்றது.

22. எல்லையற்ற பெருங்கடலேயான என்னிடம், மனதினால் தோன்றும் காற்று எண்ணற்ற எண்ண அலைகளை கொந்தளிக்கச் செய்கின்றது.

23. எல்லையற்ற பெருங்கடலின் காற்று அடங்கி அமைதியாகும் பொழுது, ஜீவனான உயிர்களைக் சுமந்து வந்த பிரபஞ்சம் என்ற கப்பல், பெருங் கடலாகிய என்னால் விழுங்கப்பட்டிருக்கும்.

24. இது எத்தனை வியப்பாய் இருக்கின்றது! நானேயாகிய இந்த எல்லையற்ற பெருங்கடலில் உயிர் அலைகள் உண்டாகி கடுமையாக மோதி, சிறு பொழுது விளையாடி பிறகு மறைந்து போகின்றன.

## இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 3

**ஜனகரின் ஆன்ம முன்னேற்றத்தைக் கண்டு அஷ்டாவக்ரர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். ஆனால், ஜனகரின் புரிதலின் போதாமையை அறிகின்றார். உலக இன்பங்களில் இருந்து விலகி இருப்பது பற்றிய, எதிர்ப்புச் செய்யுள்களின் ஒளிச்சுடர்களை உற்சாகத்தோடு தொகுத்துரைக்கிறார்.**

## அஷ்டாவக்ரர்:

1. அழிவில்லாத உன்னை ஒன்றென்று உணர்வாய், ஆன்ம ஞானியும், தீரனுமான உனக்கு பொருள் சம்பாதிப்பதில் விருப்பம் எவ்வாறு உண்டாகும்?.

2. சிப்பி என்று அறியாததினால், அதன் மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ள வெள்ளித் தோற்றத்தில் ஆசை உண்டாவதுப் போல, ஆன்மாவை அறியாததினால், மனதின் மோகத்தினால், காணும் பல்வேறு விஷய சுகங்களில் ஆசை உண்டாகின்றது.

3. கடலில் அலைகள் உண்டாகி, அது எழுவதும், வீழ்வதுமாக இருக்கும், அதுபோன்று, ஆன்மா என்று அறிந்த பிறகும், மனதின் வாயிலாக எழுகின்ற, விழுகின்ற குழப்பத்தில் ஏன் நீ மயங்குகின்றாய்?

4. அழகான தூய அறிவாக, உன்னை நீ அறிந்துக் கொண்ட பிறகு, வீணான சிற்றின்பத்தில் இந்த மனதையும், உடலையும் அடிமைப்படுத்திக் கொள்ள உன்னால் எப்படி முடியும்?

5. படைப்பனைத்திலும் தன்னையும், தன்னில் படைப்பனைத்தையும் காணுகின்ற ஞானிக்கு என்னுடையது என்ற எண்ணம் என்றுமே தோன்றாது!

6. ஒன்றேயான அத்வைத உயர் நிலையை நாடும் தீவிர முமுக்ஷுவுக்கு, பல்வேறு எண்ணங்களால் ஆட்கொள்ளப்பட்டு, அவைகளினால் ஆசை வயப்பட்டு சீரழிதல் என்பது சாத்தியமில்லை!

7. சாவை நெருங்கிக்கொண்டிருக்கும் ஒருவர் மரணத்தருவாயில் புலன் இன்பத்தில் நாட்டம் கொள்வது எப்படி மடமையோ அதுபோல, அறிவுக்கு முரணான ஆசையை ஒருவர் விரும்புவதும் விந்தையிலும் விந்தையே!

8. எது நிலையானது, எது நிலையற்றது என்பதை பிரித்தறிய தெரிந்த, இவ்வுலகம் மற்றும் மேலுலகம் பற்றிய தொடர்பற்று வாழத்தெரிந்த ஞானிக்கு, இந்த உடலின் அழிவில் அச்சம் கொள்வது என்பது கிடையாது.

9. தன்னை உபசரித்தாலும், உதாசீனப்படுத்தினாலும் தூய ஞானி தன்னில் ஒன்றுபட்டு தன் ஆன்மாவையே என்றும் காண்பதினால் மகிழ்ச்சியும், கோபமும் கொள்ளமாட்டார்.

10. தன்னுடைய உடலையும் பிரிதொருவரின் உடல் போல பாவிக்கும் பெருந்தகையான ஞானிக்கு புகழ்ச்சியிலும், இகழ்ச்சியிலும் மகிழ்ச்சியோ, மன வேதனையோ சிறிதும் கிடையாது.

11. இந்தப் பிரபஞ்சத்தையே மாயை எனக்காணும் நன்மதி உடையவனான ஞானி ஆசைகள் அனைத்தையும் விட்டொழித்த மனம் படைத்தவன் ஆதலால், அவன் சாவைப்பற்றிய எண்ணத்தினால், எப்படி அச்சம் கொண்டிருக்க முடியும்?

12. தன்னை அறிதலில் நிறைவும், ஆசைகளில் விருப்பமின்மையும் கொண்ட ஒரு மஹாத்மாவை யாரோடு ஒப்பீடு செய்ய இயலும்?

13. தன் இயல்பினாலேயே தோன்றும் இவைகளெல்லாம் ஒன்றுமில்லை என்பதை உணர்ந்த, உண்மையில் நிலைபெற்ற ஞானி இது வேண்டும் அல்லது இது வேண்டாம் என்ற இருமைகளில் இருந்து, பிரித்து பார்க்க முடியாது.

14. விருப்பு, வெறுப்பு போன்ற இருமைகளாலும், பற்று மற்றும் அகத்தழுக்கு போன்றவைகளாலும் பாதிக்காத அனுபவங்களை கொண்ட ஞானி ஒருவனால் மட்டுமே துன்பத்தையும், மகிழ்ச்சியையும் சமமாகப் பார்க்க முடியும்.

## மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 4

## ஜனகர்:

1. உலக விஷயங்களில் விளையாடுகின்ற தீரனான ஆன்ம ஞானியை, சம்ஸார பந்தத்தை சுமக்கும் பாமரருடன் ஒப்பிடுதல் கூடாது. அது தவறு!

2. இந்திரன் முதலான தேவர்கள் யாவரும் தீனர்களாக, எந்நிலையை அடைய ஆர்வம் கொள்வார்களோ, அந்நிலையை அடைந்த யோகி உண்மையில் அதனால் செருக்கற்று இருக்கின்றார்.

3. புகை மூட்டத்தால் தீண்டப்படாத வானத்தைப் போல, தன்னை உறுதியாய் அறிந்த ஞானி நல்லொழுக்கம் அல்லது தீயஒழுக்கங்களால் தீண்டப்படுவதில்லை.

4. இந்த உலகம் அனைத்தும் ஆன்மாவேயென சுதந்திரமாய் வாழும் மஹாத்மாவைத் தடைச் செய்யத் தக்கோன் எவன்?

5. புல்லின் நுனி முதல் தொடங்கி பிரம்மன் வரையிலான நால்வகை படைப்புக் கூட்டத்தில் வேண்டல், வெறுத்தல்களைத் துறந்துவிடும் திறன் ஞானி ஒருவனுக்கே சாத்தியம் ஆகும்.

6. உலகின் இறையாம் இரண்டற்ற ஒன்றேயான பொருளே தானென்று எவன் ஒருவன் உணர்கின்றானோ, அவனே எதனிடமும் பயமின்றி, அவன் சித்தம் போல சஞ்சரிப்பான்.

## நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 5

## அஷ்டாவக்ரர்:

1. நீ தூயவனாக இருக்கின்றாய், எதொன்றாலும் தீண்டப்படாமல் இருக்கின்றாய். துறப்பதற்கு என்று என்ன இருக்கின்றது? ஏற்கனவே ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களினால் உண்டான மனதைக் கரைத்து, காட்சிகள் மறைந்தால், கரைந்து போதலின் அமைதியை நீ அறிவாய்.

2. கடல் நீருலிருந்து எழும் நுரைக்குமிழிகள் போன்று இந்த பிரபஞ்சம் உன்னிடமிருந்து (மனதிடமிருந்து) எழுகின்றது. உன்னை நீ ஒன்றேயான தூய ஆன்மா என்று அறிந்து, அதன் அமைதியிலே கரைந்து உட் செல்வாய்.

3. கயிற்றை பாம்பு போல தோற்றுவிக்கும் மனபிரம்மை எப்படியோ, அதுபோல இந்தப் பிரபஞ்சம் வெளிப்படையாகக் கண்முன் தோன்றினும், தூய ஆன்மா நீ என்றறிந்து, அமலனாம் உன்னிடம் உலகில்லை என்று இவ்வாறே நீ கரைந்து போ!.

4. இன்பத்திலும் துன்பத்திலும், நம்பிக்கையிலும் ஏமாற்றத்திலும், வாழ்விலும் சாவிலும், நீ மாறாதவன், குறைபாடற்றவன் சமனாய், பூரணனாய் கரைந்து போதலின் நிலை இதுவே.

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 6

## ஜனகர்:

1. நான் எல்லையற்ற வானம். இந்தப் பிரபஞ்சம் ஒரு குடுவை என்றறிவதே ஞானம். ஆதலினால் இதை புகழ்வதோ, ஏற்றுக்கொள்வதோ, தள்ளுவதோ அல்லது அழிப்பதோ அவசியம் இல்லை.

2. மஹா சமுத்திரம் போன்றவன் நான். இந்தப் பிரபஞ்சம் அலைகள் போன்றது என்றறிவதே ஞானம். ஆதலினால் இதை புகழ்வதோ, ஏற்றுக் கொள்வதோ, தள்ளுவதோ அல்லது அழிப்பதோ அவசியம் இல்லை.

3. நான் முத்துச்சிப்பி போன்றவன். இந்தப் பிரபஞ்சம் வெள்ளியின் பொய்த்தோற்றம் என்றறிவதே ஞானம். ஆதலினால் இதை புகழ்வதோ, ஏற்றுக்கொள்வதோ, தள்ளுவதோ அல்லது அழிப்பதோ அவசியம் இல்லை.

4. இந்த அகிலப் படைப்பு அனைத்தும் நானே. அனைத்து உயிர்களிலும் நானே இருக்கின்றேன். அனைத்து உயிர்களும் என்னில் இருக்கின்றன என்றறிவதே ஞானம். ஆதலினால் இதை புகழ்வதோ, ஏற்றுக்கொள்வதோ, தள்ளுவதோ அல்லது அழிப்பதோ அவசியம் இல்லை.

ஆறாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 7

## ஜனகர்:

1. எல்லையிலா பெருங்கடலான என்னிடம் இந்த பிரபஞ்சம் என்ற கப்பல் மனம் என்ற காற்றினால் அங்குமிங்கும் அலைக்கழிக்கப் படுகின்றது. இதனால் எனக்கொன்றும் வருத்தமில்லை.

2. எல்லையிலா பெருங்கடலான என்னிடம் இந்த பிரபஞ்சத்தின் அலைகள் எழவும், விழவுமாக கரையற்று அங்குமிங்கும் அலைகழிக்கப்படுகின்றது. இதனால் வளர்வதும், தேய்வதுவும் எனக்கில்லை.

3. எல்லையிலா பெருங்கடலான என்னிடம் இந்த பிரபஞ்சம் ஒரு கற்பனையே. நான் அமைதிமயன், வடிவற்றவன், மற்றும் நிலையானவன் என்ற ஞானத்தினாலேயே யான் நிலைபெற்றுள்ளேன்.

4. தூய எல்லையற்ற ஆன்மாவிற்கு உலக பொருட்களின் விஷயங்களில்லை. அப்படிப்பட்ட தூய ஆன்மாவான நான் விருப்பு வெறுப்பு அற்று அமைதிமயமாக நிலை பெற்றுள்ளேன்.

5. நானோ ஞானமயமானவன். இந்த மாயா உலகில் எதனிடம் நான் விருப்பும், வெறுப்பும் கொள்வேன்?. இந்த உலகத்தை காட்சிப் பொருளாக ஒரு சாட்சியாக வேடிக்கைப் பார்ப்பேன்.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 8

## அஷ்டாவக்ரர்:

1. எப்போது மனம் ஏதோவொன்றை விரும்புவதும் வெறுப்பதும், வருந்துவதும் மகிழ்வதும், தள்ளுவதும் கொள்ளுவதும், உவகையும் சீற்றமும் உண்டோ அப்போதே பந்தம்.

2. எப்போது மனம் ஏதோவொன்றை விரும்புவதும் வெறுப்பதும், வருந்துவதும் மகிழ்வதும், தள்ளுவதும் கொள்ளுவதும், உவகையும் சீற்றமும் உண்டாகாதோ அப்போதே முக்தி.

3. எப்போது மனம் சில விஷயங்களில் பற்றுறுமோ அப்போதே பந்தம். எப்போது சித்தம் எவ் விஷயத்திலும் பற்று விடுமோ அப்போதே வீடு.

4. நான்’ அற்றிருந்தால் விடுதலை. ‘நான்’ என்பது உண்டானால் அதனோடு பந்தம் உருவாகின்றது. இதையறிந்து எதனையும் ஏற்பதோ, மறுப்பதோ வேண்டாம்.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 9

## அஷ்டாவக்ரர்:

1. செய்வதும் செய்யாததும், விரும்புவதும் வெறுப்பதும் போன்ற இரட்டைகள் எப்பொழுது யாருக்காக முடிவுறும்?. கருதிப்பார்த்தால், எந்நாளும் விருப்பற்று சர்வத் தியாகமே சிறந்ததென்றிரு.

2. எங்கோ ஓர் புண்ணியவான் மட்டுமே உலகியலை உணர்ந்து வாழ்க்கை விருப்பத்தையும், போகத்தையும் அறிந்து எதன் மீதும் பற்று வைக்காமல் வீடுபேறு அடைகின்றான்.

3. எண்ணிப்பார்த்தால் பெரும்பாலானவர்களின் வாழ்க்கை மும்மடங்கு துயரங்களைக் கொண்டிருக்கின்றன. துறவியோ என்றும் ஆனந்தமாய் இருக்கின்றார். உண்மையல்லாத, நிலையற்ற இந்த உலகம் விலக்கப்படுவதற்கு மட்டுமே தகுதியுடையதாய் இருக்கின்றது.

4. எங்கே இரட்டைகளில்லையோ அங்கே காலமென்பதென்ன, வயதாவதென்ன? உலக ஆசைகளிலிருந்து விலகி இருத்தலே ஒருவருக்கு தன்னை அறியும் ஆனந்தமாகும்.

5. இந்த உலகத்தில் மஹரிஷிகளும், சாதுக்களும், யோகிகளும் வெவ்வேறு கொள்கைகளுடனே இருக்கின்ற யாவருடனும் ஒத்துப்போகின்றனர்.

6. இதை எண்ணிப்பார்த்தால் இந்தப் பிரபஞ்சம் விருப்பும், இருப்பும் அற்ற மாயை என்பதை உணர்ந்த அவர்களால் மட்டுமே அறிவிற்கு ஒத்திருக்க முடியாத நிலையிலும் அமைதியுடனிருக்க முடியும்.

7. உதாசீனம், சமத்துவம் என்ற யுக்திகளால் ஞான ஸ்வரூப அனுபவத்தை அடையச் செய்து இந்த உலக மாயையிலிருந்து விடுவிக்கச் செய்பவனே குரு ஆவான்.

8. பஞ்ச பூதங்களின் நிலை அறிந்து அவைகளை பூதங்களாகவே கண்டால் அக்கணமே நீ உண்மையில் உன்னை இதுவரை கட்டிவைத்துள்ள அறியாமை என்ற கட்டறுந்து ஸ்வரூப நிலை பெறுவாய்.

9. ஆசைகளே இந்த உலகை படைக்கின்றது. ஆசைகளை மறுப்பதையும், துறப்பதையும் நீ செய்தாயானால் நீ இப்போது நீயாக (ஆத்மனாக) இருக்கின்றாய்.

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 10

## அஷ்டாவக்ரர்:

1. ஆசையை துற, அது ஓர் எதிரி. பொருள் விருப்பத்தை ஒழித்து பெற்ற வளமையைக் கைவிடு. நடு நிலைமையாய் இரு.

2. நண்பர்கள், நிலம், செல்வம், வீடு, மனைவி, மற்றும் சுற்றமும் எல்லாம் நான்கைந்து நாட்களே தோன்றி மறையும் கனவைப் போன்று கவனம் கொள்வாய்.

3. ஆசை இருக்குமிடத்தில் உலகம் இருக்கின்றது. விலகி நிற்பதில் உறுதிக்கொள். விருப்பம் ஒழித்து விடுதலை கொள். மகிழ்ச்சி அடைவாய்.

4. ஆசை கொள்வதினால் பந்தம் உண்டாகின்றது. ஆசை விடுதலே முக்தி. உலக ஆசைகளிலிருந்து விலகி இருத்தலே ஒருவர் தன்னை அறியும் ஆனந்தம் ஆகும்.

5. நீயே அறிவுமயமானவர், தூயவர். இந்த பிரபஞ்சமோ விழிப்பும், இருப்பும் அற்றது. அறியாமை என்பதும் மாயையே இதில் அறிந்து கொள்ள என்ன இருக்கின்றது?

6. பிறவிதோறும் ராஜ்யமும், மக்களும், மனைவிகளும், உடல்களும், சுகங்களும் வந்து போய் கொண்டிருப் பதெல்லாம் இழப்பதற்காகவே என்பதை அறிந்துகொள்.

7. நல்வினை, ஆனந்தம், தெய்வீகச் செயல்கள் எல்லாம் போதும்! இந்த உலகமென்னும் காட்டில் மனம் அமைதியை அறிய முடியாமல் தவிக்கின்றது.

8. எத்தனைப் பிறவிகள்தான் உடலாலும், மனதாலும், வாக்காலும் பாடுபடவில்லை? நீ ஆற்றுகின்ற காரியங்கள் அனைத்தும் களைப்பையும், துன்பத்தையும் தருபவைகளே அனைத்தையும் நிறுத்திக்கொள்ள இதுவே தருணம்.

**பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.**

# அத்தியாயம் - 11

## அஷ்டாவக்ரர்:

1. நிலைத்தன்மை இல்லாமை, மாற்றம் இவைகள் பொருட்களின் இயல்பு. இதனை உணர்ந்து நிலையான, அமைதியான, என்றும் இன்பமான ஒன்றை அறிய முயற்சி செய்!

2. ஆன்மாவே தான் மட்டும் தனித்து அனைத்தையும் செய்பவர். வேறொருவரும் இல்லை என அறிந்தவர் ஆசைகளையும், பற்றினையும் நீக்கி அமைதியுடன் நிலைத்திருப்பார்.

3. இன்பமும், துன்பமும் அவரவர் வினைப்படி வருவதும், போவதுமாக இருக்கும் என்பதை அறிந்தவர், அனைத்தையும் அடைந்த சுகத்துடன் ஒன்றையும் விரும்பவும் மாட்டார், வருந்தவும் மாட்டார்.

4. பிறப்பும், இறப்பும், இன்பமும், துன்பமும் அவரவர் விதியினுக்குத் தக வரும் என்பதை உணர்ந்து தன்னாலாவது ஒன்றுமில்லை எனக் கண்டு கொண்டவர் கவலையற்று களித்திருப்பார்.

5. எண்ணுகின்ற எண்ணங்களினாலேயே உலகத் துன்பங்களுக்கு காரணம் என அறிந்த ஒருவர் கவலையற்று அமைதியும், இன்பமும் கொண்டவனாவார்.

6. "நான்" உடல் அல்ல. இந்த உடல் என் உரிமைப் பொருள் அல்ல. நான் உணர்வாக மட்டுமே இருக்கின்றேன். இதை உறுதியாக அறிந்திருக்கும் ஒருவர் செய்து முடித்த அல்லது செய்யாமல் விட்ட காரியங்களைப் பற்றி கவலைப்படாமல் இருப்பார்.

7. பலவைகத் தன்மை கொண்டதும், வியப்புக்கு உரியதுமான இந்த பிரபஞ்சம் ஏதுமற்ற மாயை என்று உறுதியாக நம்புகின்ற ஒருவர் ஆசைகளற்று விழிப்புணர்வு கொள்கிறார். வெறுமையின் அமைதியில் வாழ்கிறார்.

பதினொன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 12

## ஜனகர்:

1. முதலில் செயல் பற்றிய பொறுமையின்மை, பிறகு மிதமிஞ்சிய பேச்சு, அதன் பிறகு தேவையற்ற சிந்தனைகள் இவற்றை உணர ஆரம்பித்தால் நான் நிலைபெறுவேன்.

2. ஓசையோ, மற்ற புலன் விஷயங்களிலோ என் கவனம் ஈர்க்கப்படாமல் கவனத்துடன், ஆன்மாவின் கூர்மையான தன் உணர்வில் மனம் விடுதலை பெற்று எதிலும் சிதறாததாய் ஒன்றில் நிலைத்ததாய் நான் இருக்கின்றேன்.

3. மாயையினால் மேலும் கவர்ச்சிகரமான தாக்கப்பட்டு சிதறிய மனதை ஒருமுகப்படுத்த அதிக முயற்சி தேவைப்படுகின்றது. இதை அறிந்தே நான் இங்கு இருக்கின்றேன்.

4. விலக்குவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும், மகிழ்ச்சிக்கும் துக்கத்திற்கும் சம்பந்தமில்லாத சம நிலையில் பிரஹ்மமே! என்று இங்கு நான் இருக்கின்றேன்.

5. பிரம்மச்சசரியம், இல்லறம், வானப்பிரஸ்தம் மற்றும் சன்னியாசம் என்ற வாழ்க்கையின் நான்கு படி நிலைகள் இன்றியும், தியானம், துறவு, மனத்தின் இலக்கு ஏதுமின்றி எண்ணத் தடுமாற்றங்கள் அற்று நான் என்றைக்கும் இங்கே இருக்கின்றேன்.

6. செயலினால் உண்டாகும் கர்ம வினை எவ்வாறு அறியாமையினால் உண்டாகின்றதோ, அவ்வாறே அதை துறத்தலும் என்ற இவ்வுண்மையை நன்கு உணர்ந்து நான் இங்கே இருக்கின்றேன்.

7. நினைக்கக்கூடாதவற்றை எல்லாம் நினைப்பது எண்ணங்களின் தவிர்க்க முடியாத தந்திரம் என்பதினால், நினைப்பொழிந்து பிரஹ்ம பாவனையில் நான் இங்கு இருக்கின்றேன்.

8. அவன் அருளாலே அவன் முயற்சியினால் இதை அவன் அடைந்திருக்கின்றான். அவன் அருள் பெற்றவனாய் அவனது இயல்பினால் அவன் அவ்வாறு இருக்கின்றான்.

பனிரெண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 13

## ஜனகர்:

1. ஒன்றுமற்ற சூன்ய நிலையாகிய அறிவின் தன்னிலை இன்பம் கொண்டவனுக்கு, புறத்தில் அடையவேண்டியது ஒன்றுமில்லை என்பதினால், இங்கு விருப்பு - வெறுப்பு என்ற இருமைகள் எப்பொதும் இல்லை.

2. புலன்கள் ஏதுமற்றவன் நான் என்பதினால், அதன் அற்ப விசய, சுகங்களினால் தாக்கப்படாதவன் என்பதினால், எனக்கு இன்பம் - துன்பம் என்ற இருமைகளும் இருப்பதில்லை.

3. உண்மையில், நான் எதையும் செய்பவனும் இல்லை, செய்விப்பவனும் இல்லை. ஆனாலும், செயலில் செயலற்ற தன்மை என்பது, என்னுடைய இருப்பின் இன்றியமையாத சக்தி.

4. உடலை நான் என்று அபிமானிக்கும் போதுதான், அதற்கான செயல்களும், செயல் விளைவுகளும் உண்டாகின்றன. ஆனால், எனக்கு யோகமும், வியோகமும் இல்லை என்பதினால், நான் என்போதும் இன்பமாய் இருக்கிறேன்.

5. ஆக்கம், அதன் இயக்கம், அதன் மாற்றம் ஆகிய விளைவுகளால் எனக்கு ஒன்றும் ஆகப்போவதில்லை. ஆதலால், அந்த ஆற்றலின் மூலம் நின்றும், நடந்தும், படுத்தும் கொண்டு இன்பமாய் இருக்கிறேன்.

6. உண்மையில் ஒடுங்குவதும், விரிவதும் என்னிடத்தில் இல்லை! எனும்போது, எனக்கு ஏது உறக்கமும், விழிப்பும். ஆதலால், நான் எந்த அவஸ்தைகளுக்கும் ஆட்படாதவனாக ஆனந்தமாக இருக்கிறேன்.

7. விஷய, சுகங்களினால் வருகின்ற அறியாமை என்னும் ஆசை அழுக்குகள் என்றுமே என்னை தீண்டியது கிடையாது. நானோ அப்பழுக்கற்ற தூய்மையானவன் என்பதினால், என்னிடத்தில் இன்பம் - துன்பம் என்ற இருமைகள் என்றுமே ஒட்டவும் முடியாது.

பதிமூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 14

## ஜனகர்:

1. நினைப்பும், மறப்பும் அற்ற என்னிடத்தில், ஞாபகமும், மறதியும் மனதினால் எவ்வாறு உண்டாக முடியாதோ? அப்படியே, விழிப்பும், உறக்கமும் எனக்கு உடலினால் உண்டாவதும் முடியாது.

2. ஆசைகள் என்னும் விதைகள் என்னிடம் இல்லாத போது, அதன் விருட்சங்களான செல்வம், நட்பு, நூலறிவு போன்றவைகள் என்னிடம் வளரவே முடியாது.

3. பரமனும், ஈசனும் ஆகிய சாக் புருஷனை உணர்ந்தபின்பு, பந்தம் - விடுதலை என்ற ஒன்றை அடைய முயல்வதும், ஒன்றும் வேண்டாம் என்று விடுவதும் ஆகிய இருமைகள் என்னிடம் இல்லை.

4. விகற்பமற்ற என்னிடத்தில், விசய, சுகங்களாகிய செயல் விளைவுகள் என்றுமே என்னைப் பற்றாத பொழுது, என்னைப் பித்தன் என்றும், சித்தன் என்றும் கூறுவது, என் உடல்மீதுள்ள அபிமானமே.

பதினான்காம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 15

## அஷ்டாவக்ரர்:

1. ஆத்ம ஞான உபதேசத்தினால், ரஜோ, தமோ குணங்களைக் கடந்து, சத்வகுண நிலையில் ஒருவன் கிருதார்த்தகன் ஆகிறான். மற்றவர்கள் அனைவரும் குணபேதங்களால், ஆயுள் முழுவதும் அடைவதற்கு எதையோ தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

2. விடுதலை என்பது, விஷய, சுகங்களை அறுத்தலே ஆகும். அதிலே ஞானம் என்பது, அவைகளை பற்றறுத்தலே என்பதினால், இதில் உனக்கு எது இஷ்டமோ, அதன்படி இருந்துக் கொள்.

3. இவ்வுண்மை அறிவை அறிந்தவன் ஊமைப்போல, செயலற்ற தன்மையில் சோம்பேறி போன்று சும்மா இருப்பான். ஆனால், இதை அறியாதவனோ, மிகச்சிறந்த பேச்சாளனாகவும், அறிவாளி போலவும், சுறு, சுறுப்பு உள்ளவன் போலவும் காணப்படுவான்.

4. உடல் நீயல்ல! உடல் உன்னுடையதும் அல்ல! செயல் புரிபவனும், அந்த செயல் விளைவுகளை அனுபவிப்பவனும் நீயல்ல. நீ ஞான மயமானவன். எதிலும் சம்பந்தப்படாத வெறும் சாக்ஷி நீ. எந்த தேவையுமற்றும் சுகமாக வாழ்!

5. விருப்பும், வெறுப்பும் போன்ற இருமைகள் மனதின் இயல்புகள். ஆனால், நீயோ மனமற்ற தூய அறிவு. அத்தகைய உன்னிடத்தில் விகற்பமும், விபரீதமும் கிடையாது. சுகமே வாழ்.

6. படைப்பு அனைத்திலும் தன்னையும், தன்னில் அனைத்து படைப்புகளையும் கண்டு, நான், எனது என்ற அகங்கார, மமகாரமற்று, சுகமாய் இரு.

7. அசைவற்ற கடலில் அலைகள் உண்டாவதுப்போல, அசைவற்ற உன்னிடம் இந்த உலகம் உண்டாகி உள்ளது. ஆகவே, இந்த இரண்டும் நீ! என்பதினால், அடைகின்ற மனம் என்பது, என்னுடைய அசையாத அறிவினால் உண்டாகின்றது என்று உணர்ந்துக் கொண்டு, தாபமற்றிரு.

8. உன்னை நீ அறிவாக நம்பு. மனம் என்னும் மாயையில் மயங்காதே! மாயைக்கு அப்பால் உள்ளவன் நீ! அறிவு மயமானவன் நீ ஒருவனே.

9. குணங்களினால் உண்டாகும் உடலை நான் என்று கருதாதே. அது, ஒரு நாள் வருகின்றது. ஒரு நாள் போகின்றது. ஆனால், ஆத்மாவாகிய நீயோ வருவதும் இல்லை! போவதும் இல்லை. பிறகு ஏன் உடலைப் பற்றி வருந்துகிறாய்?

10. உடல் இந்த பிரளயம்மட்டும் இருக்கட்டும். அல்லது இன்றே போகட்டும். இதனால், ஞான வடிவான உனக்கு ஆவது என்ன? அழிவது என்ன?

11. எல்லைத் தெரியாத அறிவுப் பெருங்கடலாகிய உன்னிடம் மன அலைகள் வரட்டும், அடங்கட்டும் அதனால், ஆவது உனக்கு என்ன இருக்கின்றது?

12. அன்பனே! அறிவே நின்வடிவம். அதிலே, உண்டாகின்ற மனமோ உன்னிலும் வேறல்ல. ஆதலால், அதில் கொள்ளுவதும், தள்ளுவதும் யார் எண்ண முடியும்? அது கற்பனையே.

13. அழிவற்ற, அமைதியான, தூய்மையான சுத்த அறிவே நீ. அத்தகைய ஞானியான உன்னிடம் பிறப்பு, அகந்தை, அறியாமை போன்றவைகள் எங்குள்ளன?

14. பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நீ ஒருவனே அறிவாய் நிறைந்துள்ளாய். அதாவது, இது, இது இன்னது என்பதை அறியக்கூடிய அறிபவனும், அறிவும், அறிபவைகளாகவும் நீயே இருக்கின்றாய். அதாவது, வளையலும், சிலம்பும், தோடும் பொன்னிலிருந்து வேறாக இருக்க முடியுமா?

15. இது நான். இது நான் அல்ல! என்ற இருமைகள் இல்லாமல், அவைகளை முற்றிலுமாக ஒழித்து, அனைத்தும் ஆத்மாவே எனத் துணிந்து, நினைப்பற்று சும்மா இரு.

16. அறிவாகிய நான் இருக்கிறேன் என்று தன் உண்மை நிலை உணராமலேயே, அனைத்தும் உருவாவது, உன்னுடைய எண்ணங்களால் எழுந்த மனது மூலம்தான். உண்மையில் அறிவாகிய நீ ஒருவன் மட்டுமே இருக்கின்றாய். உனக்கு அன்னியமாக இங்கு இருக்கும் எல்லாமே, உனக்கு வேறாக இல்லை.

17. இந்த உலகம் முழுவதும் மனதின் மயக்கமே அன்றி, வேறில்லை என்று துணிந்து, எந்தவிதமான மன மயக்கங்களுக்கும் ஆட்படாமல், அந்த தூய அறிவாய் நீ அமைதி அடைவாயாக.

18. இன்பம் - துன்பம் என்ற இருமைகளுக்கு உட்பட்ட நிலையில் மனம் மட்டுமே உள்ளது. அதுவே, அனுபவிப்பவன், அனுபவம், அனுபவிக்கப்படுவது என எல்லாமாக இருக்கின்றது. அறிவாகிய உனக்கு பந்தமும் இல்லை, முக்தியும் இல்லை. எனவே, சுகமாய் இரு.

19. ஞானமயமானவனே! சங்கற்ப, விகற்பங்களினால், மனம் சலனமடையாதே. அறிவாகிய உன்னுடைய இருப்பில், ஓய்வுற்று சுகமாய் இரு.

20. எங்கும், எக்காலத்திலும் தியானத்தை ஒழி. சித்தத்தில் ஏதும் இல்லாமல், சிந்தனைகளில் இருந்து விடுபட்டவனாக, அந்த ஆத்மனாகவே இருக்கிறாய். அப்படி இருக்கும் நீ! நினைப்பற்ற நிலையில் இருக்க வேண்டுமென்று, தியானம் ஏன் செய்கிறாய்?

**பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.**

# அத்தியாயம் - 16

## அஷ்டாவக்ரர்:

1. எத்தனை, எத்தனை நூல் அறிவுகளை நீ புறத்தில் அடைந்தாலும், அவைகளும், உனக்கு எண்ணங்களாக ஏற்றி வைக்கப்பட்ட மனதின் சுமையே. அவ்வாறு, அறிந்தவைகள் அனைத்தையும் மறக்க முடியவில்லை எனில், உனக்கு, தன்னிலை உணரும் உண்மை அறிவு வெளிப்படாது.

2. செயலை செய்பவன் நான். செயல் விளைவுகளை அனுபவிப்பவன் நான் என்ற எண்ணம் மனதில் இருக்கும்வரை, உன் உடலைச் சார்ந்த போகத்தையும், கர்மத்தையும், யோகத்தையும் நீ சார்ந்துக் கொண்டிருப்பாய். ஆனால், அவை அனைத்திற்கும் அப்பாற்பட்ட “அறிவுதான் நான்” என்று நீ உள்ளத்தில் உணர்ந்துக் கொண்டால், அக்கணமே உவகை உனக்கு உண்டாகும்.

3. உலக விசய, சுகங்களில் ஈடுபடுகின்ற மனம் எப்போதும் துயரத்தை அடைகின்றது. அதே மனம், அறியக்கூடிய ஆத்ம ஞானத்தை மட்டும் அறிந்தால் போதும், அடுத்த கணமே ஆனந்தத்தை அடைகின்றது.

4. கண்ணை இமைத்துத் திறப்பதும்கூட ஒரு செயலாக இருப்பதினால், அத்தகைய செயலுக்குக்கூட கர்த்தா (செயல் செய்பவன்) நான் அல்ல! என்ற ஆத்மஞானம் எவனுக்கு உள்ளதோ? அவன் ஒருவனே உண்மையில், உலக, சுகபோகங்களில் போக்தா (செயல் விளைவுகளை அனுபவிப்பவன்) ஆவதில்லை. அவனுக்கு மட்டுமே உண்மையான ஆனந்தம் அடைந்த அறிவினால் உண்டாகின்றது. மற்றவர்களுக்கு இந்த ஆனந்தம் கிடையாது.

5. புருஷார்த்தம் என்ற அறம், பொருள், இன்பம், வீடுபேறு போன்றவைகளினால், இது செய்தேன், இதைச் செய்யவில்லை என்ற இருமைகள் இருக்கும்வரை, மனம் அந்த அறிவை அறியாது. அதுவே, அந்த அறிவை அறிந்தவனுக்கு அவைகள் எதுவுமே அவனுக்கு கிடையாது.

6. உலக விசய, சுகங்களை விடுகின்றேன் என்பவன் பற்றற்றவன் ஆகிறான். அந்த விசய, சுகங்களிலேயே உழல்பவன் ஆசையுள்ளவன் ஆகிறான். ஆனால், விடுவதும், பற்றுவதும் ஆகிய இந்த இருமைகள் யாருக்கு இல்லையோ? அவனே நீ!

7. சம்சாரத் துக்கத்திற்குக் காரணம், ஆசைகளே ஆகும். அத்தகைய ஆசைகளினால், மனம் இருமைகளில் இறுக்கும்வரை, கொள்ளலும், தள்ளலும் இருக்கும்.

8. ஆசைகளினால் உண்டான செயல்களின் வாயிலாக வருகின்ற விருப்பு - வெறுப்பு போன்ற இரட்டைகள் என்றுமே உனக்குக் கிடையாது.

9. ஆசைகளில் இருந்து விலக முற்பட்டு, உலகியலைத் துறந்தவனுக்கும், துன்பம் இருக்கத்தான் செய்யும். அதற்குக்காரணம், அவன் இந்த உலகத்தை மனதினால் மட்டும் துறக்காமல், உடலினாலும் துறக்க முயற்சிப் பதினால், துன்பங்கள் வருகின்றது. ஆனால், உண்மையில், உடலும், மனமும் அற்றவன் “**நான்**” என்று உன்னை நீ உணரும்போது, துயரங்கள் இல்லை.

10. எவனுக்கு முக்தியின்மீது விருப்பம் உள்ளதோ? அதுப்போல, இந்த உடற்பற்றின்மீதும் விருப்பம் இருப்பின், அவ்ன ஞானியும் ஆகமாட்டான் யோகியும் ஆகமாட்டான்

11. சிவனோ, ஹரியோ, பிரம்மனோ இவர்கள் யார் உனக்கு உபதேசிக்கின்றவனாக இருந்தாலும், அவனைப் பிடித்துக் கொண்டிருக்கின்றவரை, உனக்கு உண்மையான ஆத்ம சுகம் என்பது கிடையாது.

பதினாறாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 17

## அஷ்டாவக்ரர்:

1. ஐம்புலன் இன்பங்களை விடுத்து, மனதினாலும் ஆசைகளைத் துறந்து, மன அமைதியை அடைந்து, அதன் வாயிலாக, அறிவினால் தன்னிலை உணர்ந்து, அந்த தூய இருப்பில், தனிமையில் இருப்பவன் எவனோ? அவனே ஞானி! அவனே யோகி என்று அறிவாயாக.

2. மனதைத் துறந்து, தன்னைத் தேடுபவன் சூன்யத்தை அடைகிறான். அதுவே, அந்த மனதைக் கொண்டு, தன்னை அறிகின்றவன், அந்த அறிவாகவே தன்னை எல்லாவற்றிலும் காண்கிறான். அவனுக்கு மட்டும்தான் துன்பம் என்பது இல்லை.

3. இனிப்பை விரும்புபவனுக்கு கசப்பு எப்படி சுவைக்காதோ? அவ்வாறு, தன்னில் தானாய் அனைத்தையும் கண்டவனுக்கு, தனக்கு வேறாக எதிலும் களிப்பு இருக்காது.

4. செயலை செய்பவன், செய்த செயல் விளைவுகளை அனுபவிப்பவன் என்ற விசய, சுகங்களில் உதாசீனம் உடையவன் உலகில் கிடைத்தற்கரியவன்.

5. இந்த உலகத்தில் யோகத்திலும், போகத்திலும் விருப்பம் உள்ளவர்களைக் காணலாம். ஆனால், இந்த இரண்டையும் விரும்பாத பெரியவர்கள் ஒரு சிலரே.

6. நிவிருத்தியும், பிரவிருத்தியும் ஆகிய யோகமும், போகமும் விட்ட பெரியோர்கள் மிகச்சிலரே.

7. இந்த உலகம் ஆழ்ந்த உறக்க நிலையில் மறைவதும், விழிப்பு நிலையில் தோன்றுவதும் ஆகிய இந்த இரண்டும், மனதின் கற்பிதம் என்று உணர்ந்துக் கொண்ட அறிஞன் எப்போதும் இன்பமாய் இருப்பான்.

8. இவ்வாறு மனம் அழிந்த ஒருவன், தான் அடைந்த அறிவின் வெளிச்சத்தால், அனைத்து வினைகளையும் ஒழித்தவன் ஆகிறான். அவனே, அனைத்தையும் கேட்டும், பரிசித்தும், நுகர்ந்தும், அருந்தியும் சுகமாக இருக்கிறான்.

9. சம்சாரக்கடலை வற்றவைத்தவனுக்கு, கரைசேருவது என்ற கவலை உண்டாகாது. அதுப்போல, புலன்களையும், மனதையும் பயன்படுத்தாத ஒருவனுக்கு, அனுபவிப்பதற்கு என்று ஒன்றும் இனி கிடையாது.

10. அவன் உறங்குவதும் இல்லை. விழிப்பதும் இல்லை. இமைப்பதும், திறப்பதும் இல்லை. அவனே நீ.

11. பூர்வ வாசனைகள் நீங்கிய முக்தன் தூய அறிவாக, தன்னில் தானாய் தன் சுய அறிவில் நிற்கிறான்.

12. புலன் இன்பங்களினால் உண்டாகும் போகங்களின்மீது விருப்பு - வெறுப்பு என்ற வேண்டுதல், வேண்டாமை இல்லாதவனாக, அனைத்தையும் சமமாகப் பார்ப்பவனே முக்தன்.

13. வாசனைகள் அற்று, புறத்தில் காணும் எதுவும், தன்னில் தானாய் உள்ள தன்மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்பதை உணருகின்ற முக்தன், தனக்கு வேறாக எதையும் போற்றவோ, தூற்றவோ செய்ய மாட்டான். அவனுக்கு எதனிடத்திலும் கொடுக்கல், வாங்கல் என்பது கிடையாது.

14. மகிழ்ச்சியில் உச்சம், மரணத்தில் அச்சம் என்ற இரண்டிலும் மனம் கலங்காது, அவைகளை சமமாகப் பார்க்கும் தன்னிலையில் நிற்கும், தனித்துவமான அவனை இன்பமும், துன்பமும் தீண்ட முடியாது.

15. அனைத்திலும் சம நோக்கு உள்ள முக்தனுக்கு இருமைகள் என்பது என்றுமே கிடையாது. ஆதலால், ஆண் - பெண், வளமை - வறுமை, உயர்வு - தாழ்வு என எதுவும் அவனுக்கு கிடையாது.

16. மனமற்ற அவனுக்கு, மனதின் குணங்களான சேவை, இரக்கம், துன்புறத்தல், செருக்கு, வியப்பு, பொறாமை போன்ற எந்தவிதமான குழப்பங்களுக்கும் இடமில்லை.

17. உலக விசய, சுகங்களை விரும்புவதும், வெறுப்பதும் என்பது முக்தனுக்கு கிடையாது. அவனிடம் உள்ள பற்றற்ற உள்ளத்தினால், வருவதையும், போவதையும் சமமாகப் பார்ப்பான்.

18. அகத்தில் ஒன்றுமில்லாதவனுக்கு, புறத்திலும் ஒன்றுமில்லை என்பதினால், மனதின் திரிபுகளான, நன்மை - தீமை, விகல்பம் - நிர்விகல்பம் போன்றவைகளை உணராமல், தன்னில் தானாய், தன்னிலையில் இருப்பான்.

19. நான், எனது என்ற மன மயக்கம் ஏதுமற்று, அந்த அறிவில் நிலையாக நிற்கின்றவனுக்கு, உள்ளே, வெளியே என ஏதுமில்லை என்பதினால், செயல் செய்தும் செய்யாதவனே.

20. மனதின் மமதையே உலகமாக விரியும் மற்றவர்களுக்கு வேறாக, மனம் அழிந்த முக்தனுக்கு, மனதின் இருமைகளான அறிதல், அறியாமை என்பது ஏதுமற்ற, தன்னிருப்பில் தானாய் நிற்கிறான்.

பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 18

## அஷ்டாவக்ரர்:

1. எந்த ஆத்ம ஞானம் வந்ததும், அதன் அறிவு ஒளிப் பிரகாசத்தால், இருளாகிய அறியாமைகள் அகன்று விடுகின்றன. அத்தகைய அஞ்ஞான இருளை நீக்கிய இன்ப வடிவாகிய அறிவு ஒளி போற்றி.

2. உலகையே கொடுத்தாலும் அவற்றின்மீது உள்ள ஆசையை துறக்காமல், ஒருவன் சுகம் அடைவது என்பது இயலாது.

3. கடமை எனும் கடும் வெயிலின் வெப்பத்தால், கொதிக்கின்ற மனதிற்கு, அமைதி என்ற அமுத தாரைகள் பொழிவதினால் மட்டுமே, சுகத்தை பெற முடியும் எனும்போது, எப்போதும் மன அமைதியோடு இருப்பவனே உண்மையில் முக்தன்.

4. இந்த மொத்த படைப்பும் மனதின் கற்பிதமே என்பதினால், உண்மையில் இங்கு ஒன்றுமே இல்லை என மனம் அறிவதே, இருப்பையும், இன்மையையும் ஒருங்கே உணரும் தன்மை ஆகும்.

5. விகல்பமும், வருத்தமும், மாறுதலும், மாசுமற்ற தனது உண்மை நிலை, தூரத்திலுமில்லை, அருகிலுமில்லை, அஃது என்றும் அடையப்பெற்றது.

6. அறியாமை என்ற திரை அகன்றதும், அங்கே அறிவு தெரியவரும். அப்போது, மறைப்பு இல்லை. மறைப்பு அற்றவனுக்கு துயரம் இல்லை.

7. அனைத்தும் கற்பிதம் என்று அறியாமல், அத்தகைய அறியாமைகளினால் ஆன கயிற்றினால் கட்டப்பட்ட மனதின் கட்டை, ஆத்ம ஞானம் என்ற கூர்மையான கத்தியினால் அவிழ்த்தவனுக்கு, எதனாலும் கட்ட முடியாத ஆத்மா என தன்னை உணர்ந்த பின்பு, இனி சிறுவர்கள் போல, கற்பனையைக் கண்டு ஆச்சரியம் அடைய என்ன இங்கு இருக்கிறது?

8. தன்னை உணர்ந்துக் கொண்ட முக்தன் இங்கு, இருப்பும் இன்மையும் கற்பனைகள் என்று துணிந்து, ஆசைகளற்ற நிலையில் எதை விரும்புவது? எதை வெறுப்பது?

9. அனைத்தும் ஆத்மாவாகிய நானே என்றுணர்ந்த யோகிக்கு, இது நான், அது நானல்ல! என்ற பேதமைகள் எப்படி இருக்க முடியும்?

10. மனதினால் அமைதியை அடைந்த யோகிக்கு, தோற்றமும் இல்லை! மறைத்தலும் இல்லை! அத்துடன், அறிவும், அறியாமையும்கூட அவனுக்கு இல்லை. அவனுக்கு சுகமும் இல்லை! துக்கமும் இல்லை.

11. விகல்பம் ஏதுமற்ற தன்னை உணர்ந்த முக்தனுக்கு, அரசாட்சியிலும், பிச்சை எடுப்பதிலும், இலாபத்திலும், நஷ்டத்திலும், ஜனத்திரள் உள்ள இடத்திலும், ஜனங்கள் ஏதுமற்ற காட்டிலும் விஷேசம் ஏதுமில்லை.

12. இதைச் செய்ய வேண்டும், இதை விடவேண்டும் என்ற இரட்டைகளிலிருந்து விடுபட்ட முக்தனுக்கு, நித்யம் எது? அநித்யம் எது? என்ற விவேகம் எங்குள்ளது?

13. பற்றற்ற நிலையில், கடமைகள் ஏதுமில்லாமல், இருக்கின்ற முக்தனுக்கு, உள்ளத்தில் உள்ளுதல் என்று, ஏதும் இனி இருப்பதில்லை.

14. மனதின் நினைவுகள் ஏதுமற்ற நிர்விகல்ப நிலையில் உள்ள யோகிக்கு, மோகம் எங்கே? தியானம் எங்கே? இந்த உலகம் எங்கே? இதிலிருந்து விடுதலை எங்கே?

15. உலகைக் கண்டவன், அது இருக்கின்றது என்று சாதிக்கட்டும். ஆனால், உலகைக் கண்டும், காணாதது போல இருக்கின்ற முக்தனுக்கு, இந்த உலகத்தில் எதைச் செய்வது?

16. பரம[தன்]னைக் கண்டவன், தனக்கு வேறாக இரண்டாவதாக எதையும் காண முடியாதவன். அத்தகைய நினைப்பற்றவன், எதை நினைப்பான்.

17. மனதின் விகல்பங்களால், ஆட்கொள்ளப்பட்டவன் அதை அடக்குவதற்கு முயல்வான். ஆனால், மனமற்ற முக்தனுக்கு, அடைவதற்கு ஒன்றுமில்லாத நிலையில், எதை செய்வார்? எதை அடைவார்?

18. பார்ப்பதற்கு இந்த உலகத்தாருடன் உறவாடுவதுப் போல இருக்கும் முக்தன், தனக்கு வேறாக ஒன்றையும் இங்கு காணமுடியாத காரணத்தினால், தோற்றத்தையும், மறைவையும் கண்டு மனம் கலங்க மாட்டான்.

19. நினைப்பும், நினைப்பின்மையும் அற்று, மனதின் வாசனைகள் ஏதுமற்ற முக்தன், உலகத்தார் பார்வையில் செயல்கள் பல செய்தும், உண்மையில் ஏதும் செய்யாதவனே.

20. எப்போது, எதைச் செய்ய நேரிடுகின்றதோ? அதைச் செய்து, சுகமாய் இருக்கும் முக்தனுக்கு, மனோ விகாரங்களாகிய பிரவிருத்தியிலும், மனம் கடந்த நிவிருத்தியிலும் ஒரு வித்தியாசமும் கிடையாது.

21. வாசனைகள், பற்றுக்கள் மற்றும் பந்தக் கட்டுக்கள் என ஏதுமற்ற சுதந்திரமான முக்தன் காற்றினால் ஒரு சருகு எப்படி இங்கும், அங்கும் அலைந்தாடுகின்றதோ? அப்படியே, அவனும் தனது பிராரப்த கர்ம வினை வசத்தினால் ஆடுகின்றான்.

22. உலக விவகாரங்களில் உடல் கொண்டு முக்தன் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், மனதினால் அவனுக்கு மகிழ்ச்சியோ, துக்கமோ, எதிர்ப்பார்ப்போ, ஏக்கமோ என எதுவுமே இல்லாமல், இந்த உடலையும், மனதையும் கடந்த அந்த மகத்தான அறிவாகவே சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருப்பான்.

23. மாசற்ற தூய உள்ளம் கொண்ட உத்தமனான முக்தன் தன்னுள்ளே எதையும் ஒழிக்கக் க்ருதான். அவனுக்கு எதையும் ஒழிக்கவோ, ஆக்கவோ வேண்டிய அவசியம் இல்லை. மேலும், எதனாலும் ஆக்கவும், அழிக்கவும் முடியாத அந்த ஆத்மாவாகவே அவன் இருப்பான்.

24. மனதில் எந்த விகல்பங்களும் அற்றவனான தூய முக்தன் தன்னை போற்றினாலும், தூற்றினாலும் உண்டாகின்ற மான, அவமானங்களினால் அவதிப்படுவதில்லை.

25. செயலை செய்ய வைப்பது மனதின் சங்கல்பங்கள் என்றும், அதன்காரணமாக, அந்த செயலைச் செய்வது உடல்தான் என்றும், நன்கு உணர்ந்துக் கொண்ட தூய அறிவாக இருக்கும் முக்தன், அவனது மனம் எண்ணும் எண்ணங்களை செயலாக மாற்றினாலும், செயல் செய்தும் செய்யாதவனாகவே எப்போதும் உள்ளான்.

26. அனைத்தையும் அறிந்துக் கொண்டு ஒன்றும் அறியாதவன் போல இருக்கும் முக்தன் பார்ப்பார்களின் பார்வையில் ஒரு மூடன் போலக் காணப்பட்டாலும், உண்மையில் தூய அறிவாகத் திகழும் அவனோ என்றென்றும் ஆனந்தமாக இருப்பான்.

27. பலவிதமா விசய, சுகங்களில் உழல்வதுப் போல அவன் காணப்படினும், உண்மையில் அவன் எதையும் நினைப்பதும் இல்லை! அறிந்துக் கொள்வதும் இல்லை! கேட்பதும் இல்லை! பார்ப்பதும் இல்லை.

28. மன விவகாரங்களில் ஈடுபட்டாலும், மனமற்ற நிலையாகிய சமாதியில் நின்றாலும், அந்த முக்தன் உண்மையில் முமுக்ஷுவும் ஆகமாட்டான். பாமரனும் ஆக மாட்டான். இந்த உலகம் கற்பிதம் எனக் கண்டுகொண்டு, அதைப் பார்க்கும்போதும் அவன் அந்த ப்ரம்மமாகவே இருக்கின்றான்.

29. எவனுக்கு அகந்தை உள்ளதோ, அவன் செய்யாமல் சும்மா இருந்தாலும், செயல்படுபவனே ஆவான். அதுவே, அகந்தையற்ற முக்தன் செயல்களைச் செய்துக் கொண்டிருந்தாலும், அவன் செயல் செய்யாதவனே.

30. முக்தனது மனம் கலங்கமற்று இருப்பதினால், அதில் குழப்பம், குதூகலம், பயம், சந்தேகம் என எதுவுமே இருக்காது. அவனது மனம் எதிலும் சம்பந்தப்படாமல், ஆசைகளற்று, அசைவற்று காணப்படும்.

31. எதிலும் சம்பந்தப்படாத மனதைக் கொண்ட முக்தன், பார்ப்பவர்களுக்கு பல காரியங்களில் சம்பந்தம் கொண்டு செய்ல்படுவதாகத் தோன்றுவது, அவனது பிராரப்த கர்ம வினையில் விளவுகளைத்தான் அந்த மனமும், உடலும் அனுபவமாக்குகின்றது என்பதை அவன் மட்டுமே அறிவான்.

32. உண்மையை உள்ளத்தில் உணரமுடியாத மூடன் எல்லாம் கற்றறிந்தவன் போல, அகங்காரத்தில் மதிமயக்கம் கொள்கிறான். அனைத்தையும் கற்றறிந்த ஞானியோ அகங்காரமற்று, மூடனைப்போல காணப்படுகிறான்.

33. மன ஒருமுகப்பாட்டிற்கான பயிற்சிகளை பழகி, மனதை அடக்கவேண்டும் என்று, அதற்கான பல பயிற்சிகளை மூடர்கள் பயிலுவர். ஆனால், மனதை பலவிதமான விவகாரங்களில் ஈடுபடுத்துகின்ற மூடனைப் போல இருக்கும் ஞானியோ, எந்தவிதமான மன பயிற்சிகளும் மேற்கொள்ளாமல், ஆத்ம ஞானப் பாடங்களின் மூலம், அடைந்த அறிவின் மூலம், மனமற்ற நிலையில், இருமைகளற்ற சம நிலையில், தன்னில் தானாய் தன் சுய அறிவில் எப்போதும் இருப்பர்.

34. மூடர்கள் முயற்சி செய்வதினாலும், முயற்சி செய்யாமல் சும்மா இருப்பதினாலும், மன அமைதி கொள்வதில்லை. ஆனால், ஞானியோ தன்னை அறிந்த தனித்துவமான தன் சுய அறிவில் இருப்பதினால், அவன் எப்போதும் அமைதியாக இருக்கின்றான்.

35. தன் அக அறிவை உணர்ந்துக் கொண்ட உத்தம ஞானி உலகற்று, தன் சுய அறிவில், தூய உணர்வில், அன்பு நிறைவாய் இருப்பதுப்போல, மூடர்கள் புற அறிவை தன் அறிவெனக் கருதிக்கொண்டு, அதிலேயே மனம் போன போக்கில், உழன்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

36. மனதிற்கு விடுதலை என்பது, பயிற்சிகளினால் சாத்தியமாகாது. அஞ்ஞானிகளாகிய மூடர்கள் முயற்சி செய்து செய்யும் பயிற்சிகளினால், அப்யன் ஒன்றும் இல்லை. அதுவே, முயற்சிகளை எல்லாம் கைவிட்டு, ஆத்ம ஞானத்தினால் விடுதலை அடைந்த முக்தன் எந்தவிதமான மன விகாரங்களுக்கும் உட்படுவதில்லை.

37. தனக்கு வேறாக எதையோ அடைய முயல்கின்ற மூடன் அந்த அறிவை அறிய முடியாமல் விடுதலைப் பெறுவதில்லை. அதுவே, முக்தன் அந்த அறிவாகவே தான் இருக்கிறேன் என்று உணர்ந்துக் கொண்டதினால், விடுபட்டவனாகவே எப்போதும் இருப்பான்.

38. மனதிற்கு ஆதாரமான அறிவை அறியாமல், அறியாமையினால் உள்ள அவிவிவேகிகள் பிறப்பு - இறப்பு என்ற சம்சாரத்திற்கான, விதைகளை விதைத்துக் கொண்டே இருப்பர். ஆத்ம ஞானத்தை அடைந்த முக்தனோ, இந்தப் பிறவிக்கான விதையை ஆத்மஞானம் என்ற நெருப்பினால் சுட்டு விடுகிறான்.

39. அஞ்ஞானிகள் அமைதியை விரும்பி, எல்லைக் கடந்த அந்த அறிவை, மனம் என்ற ஒரு எல்லைக்குள் அடக்க முயன்று தோற்றுப் போகின்றார்கள். ஆனால், உண்மையை உணர்ந்துக் கொண்ட முக்தனோ, தன் மனதை அந்த அறிவிடம் ஒப்படைத்து விடுகிறான்.

40. புற விசய, சுகங்களில் நாட்டம் கொண்டவனுக்கு, அக அறிவாகிய தன்னை எப்படி உணர முடியும். அதாவது, ஒருவன் தன் கண்களைக் கொண்டு, புறத்தில் இருப்பதை எல்லாம் பார்க்கலாம். ஆனால், அதே கண்களைக் கொண்டு, அவ்ன கண்களை அவனால் பார்க்க முடியாது என்பதுப் போல, புறத்திலே தேடும் இவர்ளுக்கு ஒரு நாளும் ஆத்ம பார்வை உண்டாகாது. ஆனால், முக்தனோ, புறத்தில் பார்ப்பதை விடுத்து, தன் அகத்தில் பார்ப்பதால், அந்த ஆன்மாவாகவே தான் இருப்பதை உணர்கிறான்.

41. மனதை அகத்தில் தன்னுள்ளே திருப்பியவனுக்கு உண்மை விளங்கும். வாழ்வு இனிதாய் இயங்கும். அதுவே, மனதை புறத்திலே வைத்திருப்பவனுக்கு, அந்த மனதைக் கட்டுப்படுத்த எடுக்கும் முயற்சிகளின் மூலம், மூடனது வாழ்வு முடங்கும்.

42. ஆஸ்திகம், நாஸ்திகம் என்ற இரு பிரிவினர்களும் ஒன்றை விரும்பி மற்றொன்றை வெறுப்பர். ஆனால், இந்த இரட்டைகளில் ஏதுமற்ற ஞானிக்கு விருப்பு - வெறுப்பு என்ற இருமைகள் என்றுமே இல்லை.

43. மனதின் இருமைகளில் சிக்கிய மூடர்கள் மதி மயக்கத்தால், இரண்டற்ற ஏக அறிவை அறிய முடியாமல் இருக்கிறார்கள். அதன்காரணமாக, அவர்களது ஆயுள் முழுக்க அமைதி இல்லை.

44. முமுக்ஷு மனதின் பிடியில் இருப்பதினால், பற்றுக்களை விட முடியாமல், சாஸ்திரம், குரு என எதாவது ஒன்றைப் பற்றிக் கொண்டிருப்பான். ஆனால், தன்னை உணர்ந்த தத்துவ ஞானியோ எப்போதும், எதிலும் பற்றில்லாமல் இருப்பான்.

45. விசய, சுகங்களை விடவேண்டும் என்ற விவேகமற்ற அஞ்ஞானிகள் அதற்காக, மனதை ஒரு நிலைப்படுத்த விரும்பியும், இல்லாமல் செய்ய வேண்டும் எனக் கருதியும், ஆள், அரவமற்ற குகைகளை நாடியும், தனிமையை நாடியும் செல்கின்றனர்.

46. அதுவே, மனம் என்ற சம்ஸ்கார வாசனைகளாகிய மான்கள் இதய குகைக்குள் உள்ள அறிவாகிய, சிங்கத்திடம் சிக்கி, உணவாக உட்கொள்ளப்பட்டதினால், சில இறந்து போகின்றன. இன்னும், சில அவ்விடத்தை விட்டு ஓட்டமெடுக்கின்றன.

47. தன்னை உணர்ந்து, தன்னில் தானாய் தன்மயமான ஞானியோ, இனி அறிவதற்கு ஏதுமில்லை என்பதினால், புற அறிவு அனுபவங்கள் அவனுக்கு ஆச்சரியத்தை கொடுக்காமல், அதிலேயே, கண்டும், கேட்டும், நுகர்ந்தும், உண்டும் சுகமாக இருப்பான். அதுவே, தன்னை உணராத மூடனுக்கு, உலக, விசய, சுக அனுபவங்கள் எல்லாம், அவனை ஆச்சாரியத்தில் ஆழ்த்துவது மட்டுமின்றி, அவைகளினால் அதிக துயரத்தையும் அடைவான்.

48. வஸ்து இலக்ஷணத்தை உணர்ந்துக் கொண்ட உத்தம ஞானி, ஆசாரம், அநாசாரம் போன்ற இருமைகளில் சிக்க மாட்டான்.

49. ஞானியின் மனம் கலங்கமில்லாமல் இருப்பதினால், அவன் செய்யும் செயலினால், அது நல்லதோ, கெட்டதோ? அதைப்பற்றிய, இருமைகள் அவனிடம் இல்லாமல் இருப்பதினால், அந்தச் செயல்கள் பார்ப்பவர்களுக்கு குழந்தைத் தனமாக இருக்கும்.

50. சுதந்திரம் ஒன்றே நமது பிறப்புரிமை என்பதினால், அது எப்போதும் நம்மிடம் உள்ள ஒன்று. அதன் வாயிலாக, பரமபதம் அடையலாம்.

51. இங்கு செயலைச் செய்பவன் என்றும், அந்த செயலின் செயல் விளைவுகளை அனுபவிப்பவன் என்றும் யாரும் கிடையாது. தன்னை ஆன்மாவாக உணர்ந்துக் கொண்ட முக்தனுக்கு, கர்த்தா, போக்தா மூலம் வருகின்ற பாவம், புண்ணியம் போன்ற இருமைகள் இல்லாததினால், அவனது மன நினைவுகள் நசிந்துப் போகின்றன.

52. மனதினால் கட்டப்பட்டு, அதிலிருந்து விடுதலை பெற விரும்பும் மூடன் அந்த கட்டுக்களிலிருந்து விடுபட செய்யும் செயல் விளைவுகள், அவனுக்கு என்றுமே அமைதி ஏற்பட வழிவகுக்காது. அதுவே, கட்டற்ற தீரனாகிய முக்தனது இயல்பே, எப்போதும் அமைதி மட்டும்தான்.

53. உலக பந்தங்கள் ஏதுமற்ற, சுதந்திரமான முக்தன் பார்ப்பவர்களுக்கு போகத்தில் இருப்பதுப் போலக் காணப்பட்டாலும், அவனைப் பொருத்தவரை, இந்த உலகம் என்பது மனதின் கற்பிதம் என்று அறிவான்.

54. வேதியனையும், தேவதைகளையும், சேத்திரத்தையும், அரசனையும் கண்டு வணங்குகிற முக்தனுக்கு, இதயத்தில் இருமைகளால் ஆன வாசனைகள் ஏதும் இருப்பதில்லை.

55. போற்றுதலும், தூற்றுதலும் யோகியின் மனதை என்றுமே சலனப்படுத்தாது. அவனது மனதைப் பொருத்தவரை, இருமைகள் இல்லையாதலால், இந்த இரண்டையும் சமமாகப் பார்ப்பான்.

56. அவன் மகிழ்ந்தும், மகிழ்ந்தவன் ஆகான். வருந்தினாலும், வருந்தியவன் ஆகான். அவனது அத்தகைய விந்தை நிலையை, அவனைப்போல உள்ள மற்ற ஞானிகளே அறிவர். அதாவது, பாம்பின் கால் பாம்பறியும் என்பதுப்போல, ஒரு ஞானியை, மற்றொரு ஞானி மட்டுமே அறிவான்.

57. கடமையைச் செய்தாக வேண்டும் என்பதே, மனதில் ஏற்றி வைத்துக் கொண்ட சம்சார பந்தம். மனதிலே திரிபற்று, தாபமற்று, ஒன்றுமற்ற சூன்ய வடிவாய் விளங்கும் ஞானிகள் கடமையைக் காணார்.

58. மூடன் ஒன்றும் செய்யாவிடினும், குழப்பத்தினால் மனம் கலங்குவான். சமர்த்தனாகிய ஞானி செயல்களை செய்தாலும், மனக் குழப்பமோ, கலக்கமோ அடைய மாட்டான்.

59. விவகாரங்களில் ஈடுபட்டுக்கொண்டுள்ள ஞானி, மன அமைதியுடன் கூடிய நிலையில், வந்தாலும், போனாலும், பகர்ந்தாலும், நுகர்ந்தாலும் மனம் கலங்க மாட்டான்.

60. கடல் நீரை, கழிவு நீர் அசுத்தம் செய்துவிட முடியாது என்பதுப் போல, ஞானி இந்த உலக விவகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டு இருப்பினும், தன் இயல்பாலே, அவனை எதுவும் அசுத்தம் செய்துவிட முடியாது.

61. சாதரண பாமர மனிதன் தன் வினைகள் நீங்க வேண்டும் எனக்கருதி, அவன் செய்யும் செயல் விளைவுகள், அவனுக்கு அது மீண்டும் ஒரு புதிய வினையாக மாறிவிடும். ஆனால், ஞானிக்கு அவன் செய்யும் செயலும்கூட, அவனது பழைய வினைகளை அறுத்துவிடும்.

62. விசய, சுகங்களில் ஈடுபடும் அஞ்ஞானிக்கு, அவைகள் மூலம், விருப்பு, வெறுப்பு உண்டாவதைக் காணலாம். ஆனால், ஞானிக்கு தன் உடல்மீதான அபிமானமே அற்றுப் போனதினால், அவனுக்கு, விசய, சுகங்களின் மீதான விருப்பமும் இருக்காது, வெறுப்பும் இருக்காது.

63. அஞ்ஞானியின் நோக்கம் எப்போதும், நினைப்பும், மறப்பும் போன்றவைகளை பற்றியே இருக்கும். ஆனால், தன்னிலை உற்றவனது நோக்கமோ, விஷயங்களை நினைத்தும், நினையாத தன்மையே.

64. செய்யும் செயலில், எந்தவிதமான விருப்பு - வெறுப்பு இன்றி இருக்கும், ஞானியின் அந்தச் செயல்கள், குழந்தைத்தனமாக இருப்பதினால், தூயவனான மௌனி செய்யும் செயலில், செயலற்ற தன்மையை அடைகிறான்.

65. புலன் இன்பங்களில் இருப்பதுப்போல காணப்படும் ஞானியின் மனதிலே, அவைகள்மீது ஆசை இல்லாமல், பற்றற்று இருப்பதினால், அவைகளினால் அவன் அடையும், இன்ப - துன்பங்கள் அவனை பாதிக்காது. அத்தகைய நடு நிலையாலனான ஞானி புண்ணியசாலி.

66. வெட்டவெளி போன்று எங்கும், எதிலும், நீக்கமற நிறைந்த, பிரிவற்ற ஞானிக்கு, உலகச்சுழல் ஏது? தோற்றம் ஏது? அவன் அடைவது ஏது? அதற்கான சாதனம் ஏது?

67. எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்த வெட்டவெளி எதனுடனும் சம்பந்தப்படாமல், இருப்பதுப் போன்று, எங்கும், எதிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஞானியும் எதிலும் ஒட்டாமல் இருப்பான்.

68. இதுப்பற்றி, பலவாறாக உரைத்தாலும், உண்மை உணர்ந்த பெரியோர் யோகத்தையோ, மோக்ஷத்தையோ நாட மாட்டார்கள். அவர்கள் எதிலும், எதனுடனும் ஒட்டமாட்டார்கள்.

69. பரம[தன்]னிடம் இருந்து வெளிப்பட்ட ‘மஹத்’ முதலான துவைத உலகத்தை துறந்து, தூய அறிவாய் விளங்கும் ஞானிக்கு கடமை ஒன்று எஞ்சியுள்ளதோ?

70. மனதின் மயக்கதில் உதித்த இந்த உலகமெல்லாம் உண்மையில், சித்தில் விளைந்த சத் என்று அறிந்தவனுக்கு, அந்த சத்தே சித் என்றவுடன் விளங்கும் அமைதியினால், ஆனந்தம் உண்டாகின்றது.

71. தூய சித் எனும் அறிவால் விளைந்த காணும் பொருட்களில், எதையும் காணதவனுக்கு விதி ஏது? விரக்தி ஏது? துறவு ஏது?

72. ஆதியும், அந்தமும் இல்லாத, எல்லையில்லா பொருளாய் சுடர் விடுபவனுக்கு, படைப்பு ஏது? கட்டு ஏது? சுகம் ஏது? துக்கம் ஏது? விடுதலை ஏது?

73. தூய அறிவு உதயமாகும்வரைதான் படைப்பின் மாயைப் பலவாறாக உள்ளது. அறிவை உணர்ந்த ஞானிக்கு, நான், எனது அற்று, ஆசைகளற்று இருப்பான்.

74. ஆக்கமும், அழிவும் இல்லாத ஆன்மாவாகத் தன்னையே காணும் ஞானிக்கு, உண்மையில் இந்த உலகம் என்பது இல்லை எனும்போது, அதில் நான், எனது ஏது?

75. மனம் போன போக்கிலே போகின்ற அஞ்ஞானிக்கு, மனதின் திரிபுகளான வீண்வார்த்தைகள், மன அமைதியைக் குழைக்கின்றன. அதுவே, மனமற்ற ஞானிக்கு மௌனமே அமைதிக்கு வழிவகுக்கின்றன.

76. உண்மை பொருள் இதுதான் என்ற கேள்வியுற்ற மந்தமதி படைத்தவன், தன் மனதின் மந்தத் தன்மையால், வெளியே விகற்பம் அற்றவன் போலவும், உள்ளே விசய, சுகங்களில் சபலனாகவும் இருப்பான்.

77. ஞானத்தினால், செயல்களைத் துறந்தவன், இந்த உலக நோக்கில் செயல்கள் செய்வதுப்போல காணப்பட்டாலும், எதனையும் செய்யவோ, சொல்லவோ அவனுக்கு அவசியம் உண்டாவதில்லை.

78. மனதின் விகாரத்தை விலக்கிய விவேகியான ஞானிக்கு, இருள் ஏது? ஒளி ஏது? அழிவுதான் அவனுக்கு ஏது?

79. தன் நிலையை விவரிக்க இயலாதவனும், தனித்துவம் இல்லாதவனும் ஆகிய யோகிக்கு, தீரம் ஏது? விவேகம் ஏது? தாபமின்மைதான் ஏது?

80. யோகிக்கு உண்மையியே, பிறப்பும் இல்லை! இறப்பும் இல்லை! சொர்க்கமும் இல்லை! நரகமும் இல்லை! கட்டும் இல்லை! விடுதலையும் இல்லை! யோக நோக்கில் அவனுக்கு எதுவுமே இல்லை!

81. குளிர்ந்த உள்ளம் கொண்ட முக்தன் அமுத ஊற்றெடுக்கும் எதையும், அடைய விரும்ப மாட்டான். அடையவில்லை என, வருந்தவும் மாட்டான்.

82. ஆசைகளற்ற ஞானி, அமைதி உள்ளவனைப் புகழான், தீயவனை இகழான், இன்ப - துன்பங்களில் சமனாய் இருப்பவனுக்கு, இனி செய்வதற்கு உரியதாக எதையும் காணாதவன்.

83. முக்தன் உலகியலை வெறுக்க மாட்டான். ஆத்மாவைக் காணவேண்டும் என்ற ஆசையும் கொள்ள மாட்டான். அவன் பிறந்தவனும் இல்லை! இறந்தவனும் இல்லை!

84. ஞானி மனைவி, மக்கள், வீடு, வாசல், நட்பு, முதலியன அற்றவனாய், விசய, சுகங்களில் ஆசைகள் அற்றவனாய், உடல், மனம் கடந்த, அந்த உயரிய அறிவாகவே, தன்னில் தானாய் ஒளிர்கிறான்.

85. இருப்பதை ஏற்றுக்கொண்டும், வருவது, போவதுப் பற்றி வருந்தாமலும், பகலில் கிடைப்பதை உண்டும், இரவில் சூரியன் மறைந்ததும் உறங்கியும், இந்த உலகத்தில் உழல்பவனாகிய உத்தம ஞானிக்கு எங்கு, எதிலும் சந்தோஷமே.

86. தன்னிலையாம் பூமியில் இளைப்பாறி, உலகியல் ஆனந்தத்தை துறந்த மகாத்மாவுக்கு, உடல் இருந்தாலும், போனாலும் ஒரு கவலையும் இல்லை.

87. தன் இஷ்டம்போல, சுற்றித் திரிகின்ற ஞானி, தனக்கு என ஒன்றும் வைத்துக் கொள்ளாமல், இருமைகள் ஏதுமில்லாமல், எதனினும் பற்றற்றவனாய், தானாய், தனித்து இன்புறுவான்.

88. மனமற்ற நிலையில் உள்ள முக்தனுக்கு மண்ணும், பொன்னும் சமமாக இருக்கும். முக்குண பேதங்களான சத்துவ, ராஜஸ, தாமஸ குணங்கள் நீங்கப்பெற்றவனாக, குணாதீதன் என்றவாறு இருப்பான்.

89. எதனிலும் நாட்டமற்ற ஞானிக்கு, மனதில் வாசனைகள் ஏதும் இருக்காது. மனதிலிருந்து விடுதலை அடைந்து, அனைத்திலும் நிறைவை பெற்றவனுக்கு நிகராக எவர் இருக்க முடியும்?

90. அறிந்தும், அறியாதவனாக, பார்த்தும் பார்க்காதவனாக, பேசியும் பேசாதவனாக வாசனைகள் அற்ற மனதினை உடையவன் எவனோ? அவனிலும் வேறு யார் முக்தனாக இருக்க முடியும்?

91. அரசனானாலும், ஆண்டியானாலும் எதிலும் ஆசை வைக்காமல், இருமைகள் அற்று இருக்கின்றானோ? அவனே முக்தன்.

92. மனதில் நிறைவான திருப்தியில் திளைக்கும் ஞானிக்கு உண்மையில் இந்த உலக நியதிகள் அவனைக் கட்டுப் படுத்தாது. கலங்கப்படுத்தாது. அவனுக்கு மனச்சலனம் ஏது?

93. தன்னில் தானாய், தன்னுள்ளே நிறைவைப் பெற்றவனுக்கு, அவன் அனுபவிக்கும் ஆனந்த அனுபவத்தை மற்றவர்களுக்கு அவனால் எப்படி உரைக்க முடியும்?

94. தன்னை உணர்ந்த தத்துவ ஞானி மூன்று அவஸ்தை களாக விழிப்பு, கனவு மற்றும் ஆழ் உறக்கம் போன்றவைகளில் இருந்து விடுபட்டவன். அதாவது, ஆழ் உறக்கத்தில், அது மனம் ஒடுங்குகின்ற இடம் என்ற விழிப்பு நிலையிலும், கனவை, அது மனதின் கற்பிதம் என்ற புரிதலினால் விழிப்புற்றவனாகவும், விழிப்பு நிலையில், இந்த உலகம் உண்மையில்லை என்பதினால், அதில் உறங்குபவனாகவும் இருப்பான்.

95. ஞானி நினைவிலும் நினைவற்றவன். புலன்களோடு இயங்கினும், புலனற்றவன். புத்தியுள்ளவனாயினும், புத்தியற்றவன். "நான்" என்ற தன் சுயத்தை அறிந்த அகந்தை உள்ளவனாயினும் அகந்தையற்றவன்.

96. அவன் சுகியுமல்ல! துக்கியுமல்ல! பற்றற்றவனும் அல்ல! பற்றுள்ளவனும் அல்ல! முமுக்ஷுவும் அல்ல! ஞானியும் அல்ல! அவனோ தூய அறிவு.

97. அவன் குழப்பத்தில் குழப்பம் அடையாமலும், சமாதியில் ஒடுங்காமலும், ஜடத்தன்மையில், ஜடமாகாமலும், மேதை மிகுந்தும் பண்டிதன் ஆகாமலும் இருப்பான்.

98. தன்னிலையில் உள்ள முக்தன் செய்ததில் இருந்தும், செய்ய வேண்டியதில் இருந்தும் விடுபட்டவன். அசைகள் அற்றவன். எதிலும் சமமானவன். செய்யாததையோ? செய்ய வேண்டியதையோ பற்றி நினைக்காதவன்.

99. மற்றவர்கள் அவனை புகழ்ந்தாலும், தூற்றினாலும் பாதிக்கப்படாதவன். மரணத்தைக் கண்டு பயம் அவனுக்கு இல்லை. வாழ்வைக் கண்டும் மகிழ்ச்சி அவனிடத்தில் இல்லை.

100. மன அமைதி உடையவன். ஜனங்கள் அதிகம் இருக்கின்ற சந்தைக் கடைகள் உள்ள இடமானாலும், ஜனங்களே இல்லாத காடானாலும், அவன் மனதினால் இரண்டிலும் சமமாக இருப்பான்.

பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 19

## ஜனகர்:

1. ஐயனே! தத்துவ அனுபவ ஞான உபதேசத்தை உள்வாங்கி, மனதின் அனைத்து அறியாமைகளும் நீங்கப்பெற்றேன். தங்களது அருமையான உபதேசங்களினால் இதுவரை, என் மனதை உறுத்திக் கொண்டிருந்த முட் செடிகள் அனைத்தையும் களை எடுத்து விட்டேன்.

2. என்னுடைய சுய அறிவில் திளைத்திருக்கும் எனக்கு, இன்ப, துன்பங்கள் போன்ற 'துவைதம்' ஏது? பரம[நா]ன் மட்டுமே உள்ளது எனும்போது, அதற்கு இரண்டற்றது என்ற வார்த்தையான 'அத்வைதம்' ஏது?

3. சுய அறிவில் சுயமாய் இருக்கும், எனக்கு வேறாக இங்கு எதுவுமே இல்லாதபோது, கால, தேசம் என்ற மனதிற்கு உட்பட்ட எல்லைதான் எனக்கு ஏது?

4. சுய அறிவாகிய என்னிடமே எல்லாம் தோன்றி, இருந்து, மறைகின்றபோது, அதன் அத்தனை அம்ஸங்களும் என்னுடையது எனும்போது, எனக்கு வேறாக, ஆத்மா - அனாத்மா என்ற இருமைகள் ஏது?

5. சுய அறிவாகிய என்னிடம், கனவு ஏது? உறக்கம் ஏது? விழிப்பு ஏது? துரியம் ஏது? துரியாதீதம் ஏது?

6. சுய அறிவாகிய என்னிடம், தூரம் என்பது ஏது? அருகில் என்பது ஏது? உள்ளே என்பது ஏது? வெளியே என்பது ஏது? ஸ்தூலம் என்பது ஏது? சூக்குமம் என்பது ஏது?

7. சுய அறிவாகிய என்னிடம், மரணம் ஏது? வாழ்க்கை ஏது? உலகங்கள் ஏது? உலகியல் ஏது? விஞ்ஞானம் ஏது? மெய்ஞ்ஞானம் ஏது? ஒடுக்கம் ஏது? சமாதி ஏது?

8. எப்போதும் என் சுய அறிவில் திளைத்திருக்கும் எனக்கு, புற அறிவில் உண்டான விஷய, சுகங்களாகிய உலக ஞானம் எதற்கு? அவைகள் எல்லாம், போதும்! போதும்.

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

# அத்தியாயம் - 20

## ஜனகர்:

1. மாசற்ற தூய சொரூபமாக இருக்கும் என் சுய அறிவில், அறியாமைகளாக ஏற்றி வைக்கப்பட்ட மனம் என்பது ஏது? உடல் ஏது, புலன்கள் ஏது?

2. இரண்டற்ற ஒன்றேயான எனக்கு வேறாக சாஸ்திரங்கள் ஏது? ஆத்ம ஞானம் ஏது? நினைப்பில்லாத மனம் ஏது? நிறைவு ஏது? நிறைவின்மை ஏது?

3. அறிவு, அறியாமைகள் ஏது? நான் ஏது? இது ஏது? அது ஏது? பந்தம் ஏது? முக்தி ஏது? உருவமற்ற எனக்கு இத்தனை உருவங்கள்தான் ஏது?

4. எதனாலும், எதற்கும் கட்டுப்படாத என் சுய அறிவிற்கு வேறாக, மனதின் கற்பிதங்களான பிராரப்த வினைகள் ஏது? ஜீவன் முக்தி ஏது? விதேக முக்தி ஏது?

5. புரிபவன் ஏது? புசிப்பவன் ஏது? வினை ஏது?
விளக்கம் ஏது? பரோக்ஷம் ஏது? அபரோக்ஷம் ஏது?
குணங்கள் ஏது? அவஸ்தைகள் ஏது?
அவைகளுக்கான அனுபவம் ஏது?

6. நானாம் என் சொரூபத்தில் உலகு எங்கே?
முமுக்ஷு, ஞானி, யோகி, பக்தன், முக்தன் எங்கே?

7. நானாம் என் சொரூபத்தில், படைத்தல், காத்தல்,
அழித்தல், ஏது? சாதகன், சாதனை, சித்தி ஏது?

8. அறிபவன், அறிவு, அறியப்படுவது ஏது?
ஒன்றுமற்ற சுத்த அறிவாகிய என் சுய அறிவில்
ஒன்றென்பது ஏது? ஒன்றுமில்லை என்பது ஏது?

9. எதிலும் சம்பந்தப்படாத என் சுய அறிவிற்கு
அப்பால், எனக்கு வேறாக எதுதான் இருக்க
முடியும்?

10. எந்த நினைப்பும் அற்ற எனக்கு ஞாபகம் ஏது?
மறதி ஏது?

11. மாசற்ற எனக்கு மாயை ஏது? சம்ஸாரம் ஏது?
ஜீவன் ஏது? பரமன் ஏது?

12. பிரவிருத்தி ஏது? நிவிருத்தி ஏது?

13. உடலற்ற சிவமாகிய எனக்கு உபதேசம்தான் ஏது?
சாஸ்திரம் ஏது? குரு ஏது? சீடன் ஏது?
அடையக்கூடிய வீடுபேறுதான் ஏது?

14. இருப்பேது, இன்மையேது, ஒன்றேது, இரண்டேது, பலவாறாக இப்படிக்கூறுவதற்கு, என்முன் எனக்கு வேறாக என்னதான் இருக்கின்றது?
இருப்பதெல்லாம் பரம[நா]னே!

## இருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

இத்துடன், அஷ்டாவக்ர கீதை நிறைவு பெறுகின்றது.

**ஓம் தத் ஸத்!**

# நிறைவுரை

அஷ்டாவக்ர கீதை பல்வேறு மொழிகளில், மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதிலே, ஆங்கில மொழியில் அதிக நூல்கள் காணப்படுகின்றது. இந்த நூல் ஒரு மனிதனின் மனதை ஆத்ம ஞானத்தின் வாயிலாகத்தான் மேம்படுத்திக் கொள்ள முடியும் என்ற வகையில், ஆத்மாவைப் பற்றிய ஒரு புரிதலை, இந்த மனதிற்கு உபதேசிப்பதாக அமைக்கப் பட்டுள்ளது.

அடுத்து, தன்னை உணர்ந்துக் கொண்ட தத்துவ ஞானியின் இலக்ஷணங்களையும் இந்த நூல் சுட்டிக் காட்டுகின்றது. ஒரு ஜீவன் முக்தன் எப்படி எல்லாம் இருப்பான். அவனது உண்மை சொரூபத்தில், எப்படியெல்லாம் திளைத்திருப்பான் என்ற உண்மையை உலகுக்கு எடுத்துக் கூறுகின்றது.


சுய இருப்பின் அனுபவம் உண்டானபிறகு, அந்த சித் ஆகிய தூய அறிவிடம் தன்னை ஒப்படைத்த மனதிற்கு, இனி இருமைகள் என்றுமே இருக்காது என்பதும் அறியப்படுகின்றது.

இருமைகள் என்பது, மனதில் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் திரிபுகள் என்பதினால், அதில் சிக்கிக் கொண்டு அலைப்பாயும் மனதை அடக்க முயற்சிப்பதை விட, அதன் உண்மைத் தன்மையை அதற்கு சுட்டிக் காட்டவேண்டும் என்று இந்த நூல் வலியுறுத்துகின்றது.

நன்றி!

**ஓம் தத் ஸத்!**

# அஷ்டாவக்ர கீதை



ப்ரக்ஞன்